www.padippakam.com



கம்யூனிஸ்ட் இயக்கத்தின்
தத்துவக் கண்ணோட்டம்
இயக்கயியல் பொருள்முதல்வாதம்.
பெரியாரின்
தத்துவக் கண்ணோட்டம்
மார்க்சியத்துக்கு முந்திய
கொச்சைப் பொருள்முதல்வாதம் -
சாராம்சத்தில் கருத்துமுதல்வாதம்.
கம்யூனிஸ்ட் இயக்கத்தின்
அரசியல் - பொருளாதாரக்
கண்ணோட்டம் வர்க்கப்
போராட்டத்தைப் போதிக்கிறது.
பெரியாரின் அரசியல்
பொருளாதாரக் கண்ணோட்டம்
வர்க்க சமரசத்தைப் போதிக்கிறது.
கம்யூனிஸ்ட் இயக்கத்தின்
சோசலிசம் விஞ்ஞான சோசலிசம்.
பெரியாரின் சோசலிசம்
கற்பனா சோசலிசம்.
இதுதான் கம்யூனிஸ்ட்
இயக்கத்துக்கும்,
திராவிட இயக்கத்துக்கும்
இடையிலான,
மார்க்சிய - லெனினியத்துக்கும்
பெரியாரியத்துக்கும் இடையிலான,
புரட்சியாளர்களுக்கும்
சீர்திருத்தவாதிகளுக்கும்
இடையிலான அடிப்படையான
வேறுபாடுகள்.

# பெரியார் தத்துவம் ஒரு மார்க்சிய விமர்சனம்

'உண்மை'
ஏட்டிற்கு
பதில்

**கார்முகில்**

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமாலெக

படிப்பகம்

www.padippkam.com

# பெரியார் தத்துவம்
# ஒரு மார்க்சிய விமர்சனம்

கார்முகில்

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

இரண்டாம் பதிப்பு
சனவரி 2004

விலை ரூ 25

இந்நூல் செப்டம்பர் 1989இல் "கேடயம்" வெளியீடாக வெளிவந்தது. சிறு திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

திராவிடர் கழகத்தின் 'உண்மை' மே 1988 இதழுக்கு பதிலளித்து ஜுன் 1988 முதல் ஜனவரி 1989 வரை 'கேடயம்' இதழில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்தச் சிறு நூல். மனிதனின் உயிர் பண்பும் சமூகப் பண்பும், கடவுள், மதம் பற்றிய கொள்கை, சாதிப் போராட்டமும் வர்க்கப் போராட்டமும், மனித சுயநலனும் மனித ஒழுக்கமும், தேசிய இனப் பிரச்சினை, சுயமரியாதைக் கொள்கை போன்ற அடிப்படையான பிரச்சினைகளில் பெரியாரின் கண்ணோட்டம் இச் சிறு நூலில் விமர்சனத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippkam.com

# பெரியார் தத்துவம்
# ஒரு மார்க்சிய விமர்சனம்

## 1

பெரியார் இயக்கமே உண்மையான கம்யூனிச இயக்கம் என்று 'உண்மை' இதழ் எழுதியிருக்கிறது. இது உண்மையா? கம்யூனிச இயக்கத்தின் தத்துவத்திற்கும் பெரியார் தத்துவத்திற்கும் ஏதேனும் ஒற்றுமையுண்டா? இங்கு நாம் பெரியாரியக்கத்தின் தத்துவ அடிப்படைகளையே கேள்விக்குள்ளாக்குகிறோம்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தத்துவக் கண்ணோட்டம் இயக்க இயல் பொருள்முதல்வாதம். பெரியாரின் தத்துவக் கண்ணோட்டம் மார்க்சியத்துக்கு முந்திய கொச்சைப் பொருள்முதல்வாதம்-சாராம்சத்தில் கருத்துமுதல்வாதம்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அரசியல் பொருளாதாரக் கண்ணோட்டம் வர்க்கப் போராட்டத்தை போதிக்கிறது. பெரியாரின் அரசியல் பொருளாதாரக் கண்ணோட்டம் வர்க்கச் சமரசத்தைப் போதிக்கிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சோசலிசம், விஞ்ஞான சோசலிசம். பெரியாரின் சோசலிசம் கற்பனா சோசலிசம்.

இவை கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் இடையிலான, மார்க்சிய-லெனினியத்துக்கும் பெரியாரியத்துக்கும் இடையிலான, புரட்சியாளர்களுக்கும் சீர்த்திருத்தவாதிகளுக்கும் இடையிலான அடிப்படையான வேறுபாடுகள்.

இவ்வாறு அடிப்படையிலேயே வேறுபடும் பெரியாரியக்கத்தையே உண்மையான கம்யூனிச இயக்கம் என்கிறது திராவிடர் கழகத்தின் 'உண்மை' இதழ்!

படிப்பகம்

www.padippkam.com



## 2

பெரியாரியலின் தத்துவக் கண்ணோட்டம் மார்க்சியத்துக்கு முந்திய கொச்சைப் பொருள் முதல்வாதம் - சாராம்சத்தில் கருத்து முதல்வாதம் என்று சொன்னோம்.

பெரியாரின் 'தத்துவ விளக்கமே' இதை நிரூபிப்பதற்குப் போதுமானதாகும். அதில் 'மனித அமைப்பு' பற்றிப் பேசும்போது அவர் உலகில் உள்ள பொருள்கள் எல்லாமே பல்வேறு பொருள்களின் கூட்டுப் பொருள் என்றும் அவை அனைத்தையும் இயங்குவது, இயங்காதது; ஜீவன் உள்ளது, ஜீவன் இல்லாதது எனப் பிரிக்கமுடியும் என்றும் கூறுகிறார். இந்தப் பகுப்பாய்வு முறை மார்க்சிய தத்துவ ஞானமும், இயற்கை விஞ்ஞானமும் நிரூபித்த உண்மைகளுக்கு எதிரானதாகும். 18-ம் நூற்றாண்டின் இயந்திர வகைப்பட்ட பொருள்முதல்வாத (Mechanical Materialism) கண்ணோட்டத்திற்கு உட்பட்டதாகும். இதையே நாம் கொச்சைப் பொருள்முதல்வாதம் என்று கூறுகிறோம்.

18ஆம் நூற்றாண்டின் பொருள்முதல்வாதம் பெரும்பாலும் இயந்திர வகைப்பட்டதாய் இருந்தது. ஏனெனில் அந்தக் காலத்தில் மற்றெல்லா இயற்கை விஞ்ஞானங்களைக் காட்டிலும் இயந்திர இயக்க விஞ்ஞானம் ஒன்றுதான் வளர்ச்சியடைந்திருந்தது. உயிரியல் விஞ்ஞானமும், இரசாயன விஞ்ஞானமும் குழந்தைப்பருவத்திலேயே இருந்தன. எனவே பொருள்முதல்வாத தத்துவஞானிகள் இயந்திர இயக்க விஞ்ஞானம் எனப்படும் விஞ்ஞானத்தின் விதிகளின்படி எல்லாவற்றுக்கும் விளக்கமளித்து வந்தது தவிர்க்க முடியாததாய் இருந்தது.

ஆனால் 19ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானம் பல துறை களிலும் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக மூன்று முக்கியமான மகத்தான கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. (1) உயிர்செல் பற்றிய கண்டுபிடிப்பு (2) சக்தி இடைவிடாது மாறிக்கொண்டிருக்கிறது என்பது பற்றிய கண்டுபிடிப்பு (3) பரிணாமக் கோட்பாடு பற்றிய டார்வின் கண்டுபிடிப்பு. இயந்திரவகைப்பட்ட பொருள்முதல் வாதத்தின் குறைபாடுகளைக் களைந்து இயக்கவியல் பொருள்



முதல்வாதக் கோட்பாடுகளை மார்க்சும், எங்கெல்சும் உருவாக்கு வதற்கு இக்கண்டுபிடிப்புகள் இடமளித்தன.

பெரியார்-மார்க்சுக்கும், எங்கெல்சுக்கும் பிந்திய காலத்தை-நமது காலத்தைச் சேர்ந்தவர். விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இன்னும் பலபடிகள் வளர்ந்த காலத்தைச் சேர்ந்தவர் என்றாலும் அவர் வளர்ந்த விஞ்ஞானக் கோட்பாடுகளையோ, மார்க்சும் எங்கெல்சும் வகுத்த இயக்க இயல் பொருள்முதல்வாத விதிகளையோ அறிந்து கொள்ள வில்லை. அவரைப் பொறுத்தவரை சமுதாய வரலாற்றில் தத்துவ ஞானத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் தன்னை இணைத்துக் கொள்ளாமல் 18ஆம் நூற்றாண்டின் நிலையிலேயே தன்னை பின் தள்ளி இருக்கச் செய்து கொண்டார். இதனால் அவருடைய தத்துவக் கண்ணோட்டம் முழுவதும் கொச்சைப் பொருள்முதல்வாத அடிப்படையில் அமைவது தவிர்க்கப்படவில்லை.

இதனால் பொருள்களைப் பற்றிய அவருடைய விளக்கம் ஒவ்வொரு பொருளும் அவற்றின் உள் முரண்பாடுகளினாலேயே சுயமாக இயங்கிக் கொண்டும், மாறிக்கொண்டும் இருக்கும் ஜீவியப் பண்பை பெற்றிருப்பதைக் காண மறுக்கிறது. மனிதன், உழைப்பு, உற்பத்திச் செயல்முறை, உணர்வுப்பூர்வமான பாத்திரமாற்றுவது ஆகியவற்றால் மற்ற உயிரினங்களைவிட வளர்ந்தும் வேறுபட்டும் ஒரு சமூக வாழ்க்கை பெற்றிருப்பதையும் காண மறுக்கிறது. மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து எவ்வகையிலும் உயர்ந்தவனல்ல என்றும் அவனிடம் இருக்கும் பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் கூட அவன் எல்லா உயிரினங்களையும்விடத் தாழ்ந்தவனாக ஆவதற்கே காரணமாக இருக்கிறது என்றும் கண்முன் தெரியும் உண்மைக்கு எதிராகவே வாதிடுகிறது. அவனுடைய குண வேறுபாடுகளுக்கு அவனுடைய சமூக வாழ்நிலை காரணமாக அமைந்திருப்பதை அறியாததாக, அவனுடைய உடல் அமைப்பால் அமைந்த பிறவி குணமே காரணம் என்கிறது.

உலகில் உள்ள பொருள் ஒவ்வொன்றும் பல்வேறு பொருள்களின் கூட்டுப் பொருளே என்று விளக்கும்போது பெரியார் கூறுகிறார் ''ஒரு மனிதனைப் பாருங்கள். அவன் தோற்றத்தில் மனிதனாக இருக்கிறான். பொருளில் மனிதன் என்பதற்கு எது மனிதன் என்று தொட்டுக்காட்டுங்கள் பார்க்கலாம். நீங்கள் அந்த மனிதன் என்பவனை எந்த இடத்தில் தொட்டுக்காட்டினாலும் அந்த இடத்தைக் கொண்ட பாகத்துக்கு, வஸ்துவுக்கு வேறு பெயர் இருக்கிறது. நீங்கள்

படிப்பகம்

www.padippkam.com



எதைத் தொட்டாலும் சரி; தலையைத் தொட்டால் அதற்குத் தலை; கையைத் தொட்டால் கை; காலைத் தொட்டால் கால்; மார்பைத் தொட்டால் மார்பு; முதுகைத் தொட்டால் முதுகு-இப்படியாக நீங்கள் மனிதனின் எந்த பாகத்தை தொட்டாலும் அதற்கு வேறு பெயர் இருக்கிறது என்பது மாத்திரமல்லாமல் அந்த பாகங்களையும் தொட்டுக்காட்டும்படி கேட்டால் நீங்கள் தொடும் பாகங்களுக்கு மறுபடியும் வேறு பெயர்கள் தான் இருக்கின்றன. அதாவது தலையைத் தொடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தலை என்று சொல்லிக்கொண்டு நீங்கள் மயிரையோ அல்லது தோலையோதான் தொடுவீர்கள். அப்படியேதான் வீடு, விளக்கு, மேஜை, நாற்காலி, செருப்பு, விளக்குமாறு, எந்திரம், வண்டி, கப்பல் முதலிய எல்லாப் பண்டங்களுக்கும். இதிலிருந்து என்ன விளங்குகிறது? வஸ்து அல்லது பொருள் என்பது எதுவும் பல பொருள் கொண்ட ஒரு சேர்க்கைப் பொருளாகும். அதாவது பல தன்மைகள் சேர்ந்த ஒரு கூட்டுப் பொருள். அந்த கூட்டுப் பொருள் என்பதும் ஒரு தோற்றத்துக்கு அல்லது ஒரு மாதிரியான அமைப்புக்கு பெயராகக் கொண்டதே யொழிய தனிப் பொருள் அதாவது அதுவே முடிந்த பெயர் கொண்ட பொருள் அல்ல.''[1]

இது ஒவ்வொரு பொருளும் பல பொருள்களின் கூட்டுப் பொருளே என்பதற்கு பெரியார் தரும் விளக்கம். பெரியார் கூறுவது போல தலை, கால், கை போன்ற பல வஸ்துக்களின்-பொருள்களின் கூட்டே மனிதன் என்று வைத்துக்கொண்டால் ஒரு மனிதனிடமிருந்து இவற்றைத் தனித்தனியாக பிரித்து எடுத்துவிட்டு மீண்டும் ஒன்று சேர்த்தால் மீண்டும் மனிதன் உருவாக வேண்டும். ஆனால் நமக்கு மனிதன் கிடைக்கமாட்டான். பிணம்தான் கிடைக்கும்.

இவ்வாறு பெரியாரின் பொருள் பற்றிய இயந்திர இயக்க வகைப்பட்ட விளக்கம் ஒரு பொருள் ஒரு பொருளாக இருப்பதற்கு காரணமான அதன் உயிர்த்தன்மையை – ஜீவியத்தன்மையை அறியாததாய் இருக்கிறது. மேலும் அவர் கூறுகிறார்: ''எப்படி ஒரே மரத்திலும், ஒரே உலோகமான இரும்பிலும் ஒரே ஆயுதத்தைக் கொண்டு ஒரே மனிதனான தச்சன் செய்கிற பண்டங்கள் ஒன்று நாற்காலி, ஒன்று பெஞ்சி, ஒன்று கட்டில், ஒன்று பெட்டி, ஒன்று பீரோ, ஒன்று வண்டி, ஒன்று ரயில், ஒன்று கப்பல், ஒன்று இது, ஒன்று அது என்று பல பொருள்களாகக் காணப்படுகின்றனவோ அதாவது மரம், இரும்பு ஆகிய இரண்டு 'மூலப்பொருட்கள்' சேர்க்கையால் மாற்றமான தோற்றம் கொண்ட பல்லாயிரக்கணக்கான பொருட்கள்



காணப்படுகின்றனவோ அது போலவே ஜீவப் பிராணிகளும் குறிப்பாக மனித ஜீவனும் ஒரு சில மூலப்பொருள்களின் சேர்க்கையால் மனிதனாகத் தோற்றமளிக்கும் ஒரு நகரும், இயங்கும் வஸ்துவே ஆகும். மாடு,பன்றி, கழுதை, குதிரை, யானை, சிங்கம், புலி, நரி, பாம்பு, தேள், பறவை, பூச்சி, புழு, கிருமி முதலாகிய உலகில் காணப்படும் எல்லா ஜீவப் பிராணிகளும் இப்படியே பொருள்களின் கூட்டுச் சேர்க்கையால் ஏற்பட்ட தோற்றமேயாகும்.''[2]

இதில் உயிரினம் ஒவ்வொன்றும் பல்வேறு எந்திர ரீதியான மூலப்பொருள்களின் கூட்டு என்பதன் மூலம் அவற்றின் உள்ளியங்கும் உயிர்ப்பண்பை பெரியாரின் தத்துவக் கண்ணோட்டம் மறுத்து விடுகிறது என்பதுடன் மனிதனை பிற உயிரினங்கள் போன்ற ஒரு வஸ்துவே என்று விளக்குவதன் மூலம் மனிதன் பிற உயிரினங் களிலிருந்து வேறுபடும் அவனுடைய சமூகப் பண்பையும் மறுத்து விடுகிறது. இந்த குறைபாடுகள் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இயந்திர இயக்க வகைப்பட்ட பொருள்முதல்வாதக் கண்ணோட் டத்தைச் சேர்ந்ததாகும். இத்தகைய குறைபாடான தத்துவக் கண்ணோட்டத்தின் காரணமாக பெரியார் உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் இயங்குவது, இயங்காதது; ஜீவன் உள்ளது, ஜீவன் இல்லாதது என்று பிரிக்கிறார்.

இவ்வாறு பிரிப்பது, பொருள்களின் இடம் பெயர்ந்து நகரும் இயந்திர ரீதியான இயக்கத்தை மட்டும் இயக்கம் என்று கருதுகிறது. ஆனால் பொருள்களில் இயங்காத பொருள் எதுவுமே இல்லை. பொருள் என்றாலே இயக்கமுள்ளதுதான். இயக்கத்திலிருந்து பொருளைப் பிரித்தறிய முடியாது. ஒவ்வொரு பொருளும் அதன் உள்முரண்பாடுகளினால் தொடர்ந்து இயங்கிக்கொண்டும் அளவு ரீதியாகவும், குண ரீதியாகவும் மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டு மிருக்கின்றன என்பது மார்க்சிய தத்துவ ஞானத்தாலும், இயற்கை விஞ்ஞானத்தாலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதே போல் பொருள்களை ஜீவன் உள்ளது, ஜீவன் இல்லாதது என்று பெரியார் பிரிப்பதும் இயக்க மறுப்பியல் வகைப்பட்டதேயாகும். மற்ற உயிர் பிராணிகளிடமிருந்து மனிதன் மாறுபட்டிருப்பதையும் வளர்ச்சியடைந்தவனாக இருப்பதையும் இந்த பகுப்புமுறை காணமறுக்கிறது. குறிப்பாக மனிதன் ஒரு சமூகப் பிராணியாக இருப்பதை இது காண மறுக்கிறது.

இதன் விளைவாகவே புழு, பூச்சி, பன்றி, மாடு, நாய், நரி,

www.padippkam.com



கழுதை, குதிரை, யானை, சிங்கம், புலி, கிருமி போன்ற ஒரு பொருளே மனிதன்; அவன் எவ்வகையிலும் பிற உயிரினங்களை விட உயர்ந்தவன் அல்ல என்கிறார் பெரியார். 'ஒவ்வொரு ஜீவப் பிராணிக்கும் ஒரு சக்தி அமைந்திருப்பதைப் போல மனித ஜீவப்பிராணிக்கும் ஒரு சக்தி அமைந்திருக்கிறது என்று கூறலாமே தவிர எல்லா ஜீவப் பிராணிகளையும்விட மனிதன் உயர்ந்தவன் என்று கூறுவதற்கு மனிதனிடம் ஒன்றும் இல்லை' என்பது அவர் கூற்று.

மனிதன் மற்ற வேறு எந்த உயிரினங்களையும்விட மேலானவன் என்பது சந்தேகமற்ற நிலையில் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. மற்ற வேறு எந்த உயிரினங்களிடமும் இல்லாத உழைப்பு, உற்பத்திச் செயல்முறை, உணர்வுப்பூர்வமாக பாத்திர மாற்றுவது ஆகிய பண்புகள் மனிதனுக்கு மட்டுமே உரியதாகும். மனிதன் விலங்கிலிருந்து முறித்துக் கொள்வதற்கும் காட்டுமிராண்டி நிலையிலிருந்து இன்றைய நாகரிக பொருளாதார, கலாச்சார வாழ்க்கையை எட்டுவதற்கும் அவனிடம் இருக்கும் இந்தப் பண்புகளே காரணமாகும்.

மனிதனுக்கே உரிய இந்தப் பண்புகளின் பரிமாணம் பற்றி பெரியார் அறிந்திருக்கவில்லை.

மனிதனுக்கு சிந்தனா சக்தியும், பகுத்தறிவும் மற்ற ஜீவப்பிராணிகளுக்கு இருப்பதைவிட அதிகமாகவே இருக்கிறது என்கிறார் பெரியார். பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் மனிதனுக்கு மட்டுமே உரியவை; அவனுடைய உழைப்பு, உற்பத்திச் செயல் முறை, உணர்வுப்பூர்வமாக பாத்திரமற்றுவது ஆகிய பண்புகளின் விளைபயன் என்பதை அவர் அறியவில்லை. மேலும், பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் மற்ற பிராணிகளைவிட மனிதனின் தாழ்ந்த தன்மைக்கு காரணமாகிவிட்டதே தவிர உயர்ந்த தன்மைக்கு காரணமாகி விடவில்லை என்கிறார்.

அவர் கூறுகிறார்: ''பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் இருக்கிற காரணத்தினாலேயே மனிதனுக்கு மாத்திரம் ஒழுங்காய் ஒழுக்கமாய் நடக்கக் கடவுளும், மதமும் தேவைப்பட்டிருக்கின்றன. இவை இல்லாதிருக்குமானால் மனிதன் நேர் வழியில் நடக்கமாட்டான் என்கிற கெட்ட பெயருக்கு அருகதை உடையவனாக ஆகிவிட்டான்.''

''மனிதனுக்குப் பகுத்தறிவானது, மனிதனுக்கு சாந்தியற்ற நிலையையும் எல்லையற்ற ஆசையையும், பொறாமையான போட்டியையும் உண்டாக்கி ஓய்வில்லாமல் செய்திருக்கிறது.''



''மனிதனுடைய சிந்தனா சக்தியானது மனிதனை மனிதன் உண்ணவும், மனிதனை மனிதன் சுரண்டவும், மனிதனை மனிதன் இழிவுபடுத்தவும், மனிதனை மனிதன் வெறுக்கவுமான காரியங்களைச் செய்யச் செய்கிறது.''

''பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் இல்லாத மற்ற ஜீவப்பிராணிகளிடம் இருக்கும் எந்த கெட்ட காரியம் மனிதனிடம் இல்லை என்று சொல்ல முடியும்? மற்ற ஜீவன்களுக்குத் தொல்லை கொடுப்பது, வஞ்சிப்பது, துன்பப்படுத்துவது முதலாகிய கெட்ட சுபாவம் பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் படைத்த மனிதனிடம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா?''[3]

மனிதனிடம் காணப்படும் அத்தனை தீய பண்புகளுக்கும், அவனிடம் காணப்படும் சிந்தனா சக்தியும், பகுத்தறிவுமே காரணம் என்று சுலபமாக பெரியார் விடை கண்டுபிடித்து விட்டார். ஆனால் அவருடைய விடை குழந்தைப் பிள்ளையின் கேள்விகளுக்கு முன்னால்கூட நிற்கும் சக்தியற்றதாகும்.

மனித சமுதாயத்தை முன்னேற்றும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், புரட்சிகர சித்தாந்தங்களும் எத்தனை, எத்தனை! தலைவர்களும், அறிஞர்களும், இயக்கங்களும் எத்தனை, எத்தனை! இவை எல்லாம் பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் விளைவித்த கேடுகளா? அல்லது இவை அனைத்தும் மற்ற ஜீவராசிகளுக்கும் உரிய பொதுவான விசயங்களா? அவ்வாறாயின் மாடுகளும் பன்றிகளும் எத்தனை எத்தனை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை செய்து காட்டியுள்ளன? புழுக்களும், பூச்சிகளும் எத்தனை எத்தனை புரட்சிகர கோட்பாடுகளை உருவாக்கி இருக்கின்றன? நரிகளும், கழுதைகளும் எத்தனை எத்தனை அறிஞர்களை, இயக்கங்களைப் பெற்றிருக்கின்றன? பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் மனிதனின் தாழ்ந்த தன்மைக்குக் காரணமாகி விட்டன என்றால், அவனுடைய எல்லா தீய பண்புகளுக்கும் காரணமாகி விட்டதென்றால் அதைப்பரப்புவதையே தனது வாழ்வின் கடமையாக பெரியார் பிரகடனப்படுத்திக் கொண்டதேன்?

மனிதன் பேசுகிற சக்தி உடையவனாக இருப்பதால் அந்த சக்தியைப் பயன்படுத்தி தன்னை உயர்ந்தவன் என்று கூறிக்கொள்கிறானே தவிர உண்மையில் அவனிடம் உயர்ந்த தன்மைகள் எதுவும் இல்லை என்கிறார் பெரியார். ''எப்படி ஒரு பட்சி

படிப்பகம்

www.padippkam.com



தனக்குப் பறக்கிற சக்தி இருப்பதால் அது பறக்கிற சக்தியைப் பயன்படுத்தி ஆகாயத்தில் பறந்து தான் எல்லா ஜீவப்பிராணிகளையும் விட மேலான சக்தி வாய்ந்ததாக ஆகாயத்திலிருந்து காட்சியளிக்கிறதோ அது போல மனிதன் தனக்கு உண்டான சக்தியை இப்படிச் சொல்லப் பயன்படுத்திக் கொள்கிறான் என்பதல்லாமல், மனிதனிடம் தான் உயர்ந்த ஜீவன் என்று சொல்லிக் கொள்ள எந்த ஒரு தனிப்பட்ட குறிப்பும், அடையாளமும் இல்லை''[4] என்பது பெரியார் கூற்று.

மனிதனுக்கு மட்டுமே வாய்த்திருக்கும் இந்த பேசும் சக்தியும், பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் போல அவனுடைய உழைப்பு, உற்பத்தி செயல்முறையின் பாற்பட்ட சமூக வாழ்க்கையின் விளைபயன் என்பதை பெரியார் அறிந்திருக்கவில்லை. அவரைப் பொறுத்தவரை மனிதனின் பேசும் திறனும், சிந்தனா சக்தியும், பகுத்தறிவும், பறவையின் பறக்கும் ஆற்றலும் அவரவர்க்கு இயற்கையிலேயே அமையப் பெற்றவை, அவ்வளவே. மனிதன் பெற்றிருக்கும் தனிச்சிறப்பான பண்புகள் மற்ற ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒரு சக்தி அமைந்திருப்பதைப் போன்றதுதான். தனிச்சிறப்பான அவனுடைய உயர்வைக் காட்டுவதற்கான எதுவும் இல்லை என்று பெரியார் கூறுவது, 19,20ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி அடைந்திருக்கும் இயற்கை விஞ்ஞானத்தையும், தத்துவ விஞ்ஞானத்தையும் புறக்கணித்துவிட்டு 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த இயக்க மறுப்பியல்-இயந்திர இயக்க இயல் பொருள்முதல்வாதிகளின் வரிசையில் அவர் சேர்ந்து கொண்டிருப்பதையே காட்டுகிறது.

மனிதன் தான் பெற்ற பண்புகளால் நாள்தோறும் வளர்ந்து வருகிறான். எண்ணற்ற செல்வ வளங்களை ஆக்குகிறான். புதிய, புதிய திறன்களைப் பெற்று வருகிறான். அவனுடைய பொருளாதார ஆன்மீக வாழ்க்கையை செழுமைப்படுத்தி வருகிறான். அவனுடைய பேசும் ஆற்றல், பேசும் ஆற்றலாகத் தொடங்கி வளம் பெற்ற மொழிகளையும், எண்ணற்ற உயர்ந்த கலை, இலக்கியங்களையும் படைப்பதாக வளர்ந்திருக்கிறது. அவனுடைய உழைப்பும் உற்பத்திச் செயல்முறையும் கணக்கிட முடியாத திறத்துடன் வளர்ந்து வருவதுடன் அவனுடைய கலாச்சாரப் பொருளாதார வாழ்க்கையை மேலும் மேலும் செழுமைப்படுத்தி வருகிறது. அவனை விலங்குலகிலிருந்து மனிதனாகவும், காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக நிலைக்கும் வளர்த்தது அவனுக்கு மட்டுமே உள்ள சிறப்பு குணங்கள்தான். இத்தகைய மாற்றம், வளர்ச்சியை வேறு எந்த பிராணியின்



தனிச்சிறப்பான பண்புகளால் சாதிக்க முடிந்துள்ளது? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பறவை எப்படிப் பறந்ததோ அதே போல்தான் இப்போதும் பறந்து கொண்டிருக்கிறது; கூடுகட்டிக் கொண்டிருக்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாய் எப்படி குரைத்ததோ அப்படித்தான் இப்போதும் குரைத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பறவையிலும், நாயிலும் என்ன மாற்றம், வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது? எதுவும் இல்லை. இந்த வேறுபாட்டைப் பார்க்க முடியாததுதான் பெரியாரின் இயக்க மறுப்பியல் பார்வை.

அவர் இதோடு மட்டும் நிற்கவில்லை. மனித அமைப்பு பற்றிய அவருடைய தத்துவ ஆராய்ச்சியை அவர் இன்னும் தொடர்கிறார். மனிதர்கள் நல்லவர், கெட்டவர், திருடர், வஞ்சகர், கொடுமைக்காரர், சாது, கோபக்காரர், பொய்யர், உண்மையர், பொறாமைக்காரர், சுயநலக்காரர், நன்றியே இல்லாதவர் என்கிறதான குணபேதம் கொண்டவராக இருப்பதற்கு காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பி இவை அனைத்தும் அவரவர் 'உடலமைப்புக் கூறுகளால் உண்டான பிறவிக் குணங்களாகும்' என்றும், 'ஜீவ சரீரத்தில் மூளை நரம்பாகிய கருவிகள் அமைந்திருக்கும் அமைப்பால்' ஏற்படுபவை என்றும் அவரே பதிலும் கூறுகிறார்.[5]

ஆனால் ஒரு மனிதனின் பண்பு இவ்வாறு மிக எளிமையாக அவனுடைய சரீர அமைப்பினால் பிறவிக் குணமாக அமைவதில்லை என்பது மிகச் சாதாரணமான விஞ்ஞான உண்மையாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி. ஒவ்வொருவனும் ஒரு தொழிலாளியாகவோ, முதலாளியாகவோ, விவசாயியாகவோ அல்லது வேறு ஏதேனும் ஒரு வர்க்கமாகவோ ஒரு வர்க்க வாழ்க்கை வாழ்கிறான். அவன் ஒரு தமிழனாகவோ, தெலுங்கனாகவோ, மராட்டியனாகவோ, சீனனாகவோ, உக்ரேனியனாகவோ, ஒரு தேசிய இனமாக வாழ்கிறான். இந்தியாவிலோ, அமெரிக்காவிலோ, ரஷ்யாவிலோ, பாகிஸ்தானிலோ ஒரு நாட்டினனாக; இந்துவாகவோ, முஸ்லீமாகவோ, சீக்கியனாகவோ, ஒரு மதத்தவனாக அல்லது நாஸ்திகனாகவோ, ஆஸ்திகனாகவோ வாழ்கிறான். ஒரு கம்யூனிஸ்டாகவோ, காங்கிரஸ்காரனாகவோ அல்லது வேறு கட்சிக்காரனாகவோ கட்சி சாராதவனாகவோ வாழ்கிறான். ஏதேனும் ஒரு குடும்பப் பின்னணியில் பொருளாதாரச் சூழ்நிலையில், கலாச்சார மரபுகளில் வாழ்கிறான். ஒரு திராவிடனாகவோ, ஆரியனாகவோ, மங்கோலியனாகவோ, நீக்ரோவாகவோ ஒரு இன மரபைக்

படிப்பகம்

www.padippkam.com



கொண்டவனாக வாழ்கிறான். சமூக விஞ்ஞானம் கூறுவதென்ன வெனில் இவை அனைத்தும் சேர்ந்தே ஒரு மனிதனின் குணத்தைத் தீர்மானிக்கிறது என்பதாகும். ஆனால் இந்த சமூக விஞ்ஞானம் பெரியார் தத்துவப் பார்வையில் அடங்குவதில்லை. எனவேதான் மனிதர்களின் குணபேதங்களுக்கு மனிதனின் சரீர அமைப்பையும் பிறவியையும் காரணம் கூறுகிறது பெரியாரியல். எல்லாம் ஆண்டவன் படைப்பு என்ற கடவுள்வாதிகளின் குரலைப் போல் இது ஒலிக்கிறதே என்று யாராவது கேட்டால் பெரியாரியல்வாதிகள் அதை மறுத்து நிறுவுவது கடினமே.

# 3

பெரியாரின் தத்துவக் கண்ணோட்டம் இயந்திர வகைப்பட்ட பொருள்முதல்வாதம் என்று சொன்னோம்.

அவர் மனிதனின் உயிரியல் பண்பையும், சமூகவியல் பண்பையும் அறியாதவராக, மனித உயிரின் இயக்கம், மனிதனின் குணாம்சம், மனிதனின் உணர்வு, பேச்சு மற்றும் சிந்தனை பற்றி தத்துவ விளக்கம் அளிப்பது இதற்கு மேலும் சான்றாகும்.

மனிதன் பிற பொருள்களிலிருந்து வேறுபடும் ஒரு உயிர்ப்பிராணி. அவன் பிற பொருள்களிடமிருந்து வேறுபடும் ஒரு இயக்க வடிவத்தை, உயிரியல் இயக்க வடிவத்தைக் கொண்டிருக் கிறான். உயிரியல் இயக்கம் என்பது வளர்சிதை மாற்றம் கொண்டது; இனப் பெருக்க சக்தி கொண்டது; உறுத்துணர்ச்சியும்(Irritability), புற உலகின் மீது விளைவும் எதிர்விளைவும் கொண்டது. இப்பண்புகள் எவையும் இயந்திர இயக்கத்திற்கு இல்லை. எனவே இயந்திரத்தின் இயக்கத்திலிருந்து உயிரினமான மனிதனின் இயக்கம் அடிப் படையிலேயே வேறுபட்ட தன்மை கொண்டதாகும். எனவே மனிதனின் இயக்கத்தையும் – எந்த உயிரினங்களின் இயக்கத் தையும்– இயந்திரங்களின் இயக்கத்துடன் ஒப்பிட்டு விளக்க முடியாது. ஆனால் பெரியார் மனிதனின் உயிர் இயக்கத்தை இயந்திரங்களின் இயக்கத்துடன் ஒப்பிட்டு விளக்குகிறார். இதன் மூலம் இயந்திரங்களுக்கு இல்லாத உயிர்த்தன்மை மனிதனுக்கு இருப்பதை அவர் அங்கீகரிக்கவில்லை.



அவர் கூறுகிறார் : ''உயிர் என்பது பொருள் தன்மை அற்றது. பொருள் தன்மையற்றது என்றால் இயங்கும் தன்மையுடையதாகும். இயங்கும் தன்மை உடையது என்றால் அதற்கு வேலை செய்து கொண்டிருக்கும் இயந்திரத்தை அல்லது அது இயங்கிக் கொண்டிருக்கும் தன்மையைச் சொல்லலாம். எது போல என்றால் ஒரு கடிகாரம் ஓடிக் கொண்டிருப்பது போலவும், ஒரு இஞ்சின் ஓடிக் கொண்டிருப்பது போலவும்,ஒரு இஞ்சின் இயங்கிக் கொண்டிருக்கும் போது அதன் அசைவின் காரணமாக அதனுடன் இணைக்கப்பட்ட மற்றும் பல இயந்திர சாதனங்கள் வேலை செய்வது போலவும் இருக்கிறது போன்றே உயிர் என்பதும் ஒரு இயங்கும் தன்மையாகும். அந்த இயங்கும் தன்மையான உயிர் என்பதற்குக் காரணமாய் இருப்பது சரீரக் கூட்டு அமைப்பும் சரீரத்துக்கு அளித்து வரும் ஆகாராதி சாதனங்களுமாகும்.''[6]

பெரியாரைப் பொறுத்தவரை ஒரு இயந்திரம் பல்வேறு பாகங்களால் உருவாக்கப்பட்டிருப்பது போல மனிதன் ஒரு சரீரக் கூட்டமைப்பு ஆகும். இயந்திரங்கள் மின்சாரம் அல்லது டீசல் மூலம் இயங்குவது போல மனிதன் ஆகாராதிகள் மூலம் இயங்குகிறான். அவ்வளவே. பெரியாரின் தத்துவக் கண்ணோட்டத்தில் மனிதனின் உயிரியல் இயக்க வடிவம் எவ்வித முக்கியத்துவமும் பெறுவதில்லை.

அது மட்டுமின்றி மனிதனின் சமூகவியல் இயக்கமும் கூட பெரியாரின் தத்துவக் கண்ணோட்டத்தில் எவ்வித முக்கியத்துவமும் பெறுவதில்லை.

மனிதன் பிற பொருள்களிலிருந்து வேறுபட்ட ஒரு உயிரினம் என்பது மட்டுமல்ல, பிற உயிரினங்களிடமிருந்து வேறுபட்ட ஒரு சமூகப் பிராணியுமாவான். அவன் ஒரு சமூக வாழ்க்கை வாழ்கிறான். அவனுடைய வாழ்க்கை உழைப்பு, உற்பத்திச் செயல்முறை, உணர்வுப்பூர்வமான பாத்திரமாற்றுவது ஆகிய அவனுக்கே உரிய பண்புகளால் உருவானதாகும். அவனுடைய சமூக வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை (Material Life), கலாச்சார, ஆன்மீக வாழ்க்கை (Cultural and Spiritual Life) என இரு பக்கங்களைக் கொண்டிருக்கிறது. மனிதன் ஒரு உயிர்ப் பிராணி என்ற முறையில் அவன் உயிரற்ற பிற பொருட்களிடமிருந்து வேறுபட்ட முறையில் உயிரியல் இயக்க வடிவத்தைக் கொண்டிருப்பது போல அவன் ஒரு சமூகப் பிராணி என்ற முறையில் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபட்ட முறையில் சமூகவியல் இயக்க வடிவத்தையும் கொண்டிருக்கிறான்.

படிப்பகம்

www.padippkam.com



மனிதன் தனது சமூகவியல் இயக்க வடிவத்தின் காரணமாக– உழைப்பு, உற்பத்திச் செயல்முறை, உணர்வுப்பூர்வமான பாத்திரமாற்றுவது ஆகிய அவனுடைய பண்பினால் அவன் பெற்றிருக்கும் பொருளாதார மற்றும் கலாச்சார, ஆன்மீக வாழ்க்கையின் காரணமாக – அவன் முற்றிலும் விலங்குகளிடமிருந்து வேறுபட்டவனாக, வேறுபட்ட பண்பு கொண்டவனாக இருக்கிறான். இவனுடைய பொருளாதார வாழ்வில் விலங்குகளின் குறையாடும் பொருளாதாரத்திற்கு முடிவு கட்டியிருக்கிறான். கூட்டு நலன் பேணுவதும், பிறருடன் இணைந்து வாழ்வதுமே மனிதனின் சுபாவம் என்பதை அவனுடைய சமுதாய வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது. மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு - பொருளாதார, கலாச்சார, ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு – இப்பண்புகள் பேணப்பட வேண்டும், வளர்க்கப்படவேண்டும் என்பதையும் அவன் அறிந்து இருக்கிறான். மனித சமுதாய முன்னேற்றத்திற்காக இயற்கையை எதிர்த்து மட்டுமின்றி மனித சமுதாயத்திலேயே அதன் வளர்ச்சிக்குத் தடையாக மாறிய பிற சுரண்டும் ஆதிக்க வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்திலும் மனித இனம் கூட்டு நலனையும், மற்றவர்களுடன் இணைந்து வாழும் தனது பண்பையும் உறுதியாகப் பற்றி நின்று மேலும் வளர்ந்திருக்கிறது.

உற்பத்திச் சாதனங்களைத் தனது உடைமையாக்கிக் கொள்வதன் மூலம் சுரண்டும் ஆதிக்க வர்க்கமாக மாறிய ஆண்டான்களும் (ஆண்டான் அடிமைச் சமுதாயத்தில்), நிலப்பிரபுக்களும் (நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில்), முதலாளிகளும் (முதலாளித்துவ சமுதாயத்தில்) தமது வர்க்க நலனின் காரணமாக சமுதாயத்தின் கூட்டு நலனுக்கும், ஒன்றிணைந்து வாழும் மனித சமூக வாழ்க்கைக்கும் அபாயகரமானவர்களாக மாறியபோதெல்லாம் இந்த வர்க்கங்களை அரசியல், பொருளாதார ஆதிக்கத்திலிருந்து தூக்கிஎறிந்து ஒழித்துக்கட்டியதன் மூலம் உழைக்கும் மக்கள் மனித சமுதாயத்தின் உயர்ந்த பண்புகளைப் பேணிப்பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர்.

ஆனால் பெரியார் மனிதன் இயற்கையிலேயே சுயநல முள்ளவன் என்றும், ஒழுக்கமாகவோ, பிறருக்குத் தொல்லை இல்லாமலோ இருக்க முடியாதவன் என்றும் கூறுகிறார். பொதுவாகவே உயிரினங்கள் தன்னலம் பேணுவதே இயற்கை என்றும், பிறர் நலம் பேணுவது இயற்கைக்கு விரோதமானது என்றும் கூறுகிறார். இது மனிதனுக்கும் பொருந்தும் எனக் கருதும் பெரியார்,



அவன் பிற உயிர்களைவிட அதிக அறிவு பெற்றிருப்பதால் அவன் உணர்ச்சியின் சுயநலத்தை மட்டுமே கவனிப்பான் என்றும் அது சமுதாயத்தில் உள்ள மற்ற மனிதருக்கும் பிற ஜீவன்களுக்கும் தொல்லை விளைவிக்கக் கூடியது என்றும், சமுதாயத்திற்கு கேட்டை விளைவிக்கக் கூடியது என்றும் கருதுகிறார். 'சுருங்கச்சொன்னால் மனித சுபாவம் இயற்கை சுதந்திரத்தோடு இருந்தால் ஒழுக்கமாகவோ, பிறருக்குத் தொல்லை இல்லாமலோ இருக்க முடியாததாகும்' என்கிறார்.

மனிதன் ஒரு சமுதாய வாழ்வைக் கொண்டிருக்கிறான். அது கூட்டு நலனையும், பிறருடன் இணைந்து வாழ்வதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இப்பண்புகளுக்கு எதிரான போராட்டத்திலேயே மனித சமுதாயம் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்ற உண்மையை பெரியாரியல் புறக்கணித்து விடுகிறது. இதற்குக் காரணம் விலங்குகளின் வாழ்க்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் வேறுபாடு காணமுடியாத அதன் இயந்திர வகைப்பட்ட பொருள்முதல்வாதக் கண்ணோட்டமேயாகும்.

மனிதனின் உணர்வு பற்றிய பெரியாரின் தத்துவ விளக்கம் அவருடைய இயந்திர வகைப்பட்ட பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டு ஆகும்.

அவர் மனிதனின் தன்னுணர்வு விலங்குகளின் தன்னுணர்வு போன்றதே என்றும்,மனிதனுக்கு பேசும் ஆற்றல் இருப்பதால் அவன் தனது உணர்ச்சியை வார்த்தைகளில் வெளிப்படுத்திக் கொள்கிறான் என்பதைத் தவிர வேறு வேற்றுமை எதுவும் இல்லை என்றும் கருதுகிறார்.

அவர் கூறுகிறார் : ''உயிர் உள்ள மனிதன் என்பவன் பேசும் சக்தி உடையவனாக இருப்பதால் அவன் தன்னை அறிவிப்பதற்கும், 'நான்' 'என்னுடையது' என்பதான வார்த்தைகளில் தன் உணர்ச்சியைக் காட்டுகிறான். மற்ற ஜீவன்களுக்கும் தன்னுணர்ச்சி இருக்கிறது என்றாலும் அவை அதைப் பேச்சின் மூலம் காட்ட முடிவதில்லை. ஆனால் செய்கையின் மூலம் காட்டுகின்றன. உதாரணமாக ஒரு நாயை 'ரோஸ்' என்று பெயர் வைத்து வளர்த்தோமானால் 'ரோஸ்' என்று அழைத்தவுடன் ஓடி வருகிறது. மற்றும் சில நாய்கள் சொன்னபடி நடக்கின்றன. இந்த அழைத்தல், கட்டளைகள் தனக்குத்தான் தன் எஜமானனால் அல்லது மற்றவனால் சொல்லப் பட்டவை என்று உணர்ந்து அதன்படி நடக்கிறது. இதுபோல அநேக

படிப்பகம்

www.padippkam.com



உயிர்களுக்கு நான், என்னுடையது, தன் குஞ்சு, தன்குட்டி, தன் கூண்டு என்பது போன்ற தன் உணர்ச்சி இருந்து வருகிறது. இந்த தன் உணர்ச்சியானது அதற்கு உயிர் இருக்கிறபடியால் ஏற்பட்டது என்பதல்லாமல் அது (நான், எனது) என்பது ஒரு தனிப்பொருள் தன்மையால் அல்ல என்பதையும் உணர்க.'' [7]

ஒரு மனிதனின் தன்னுணர்வும், விலங்குகளின் தன்னுணர்வும் ஒன்றே. ஒரு உயிரின் தன்னுணர்வு என்பதற்கு மேல் எதுவும் இல்லை என பெரியார் கூறுவதை இதிலிருந்து உணரலாம்.

மேலும் இந்த உணர்வு தானாக உண்டாகிறது என்று கூறும் பெரியார் அது எப்படி தானாக உண்டாகிறது என்பதையும் இயந்திர வகைப்பட்ட பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலேயே விளக்குகிறார். அவர் கூறுகிறார்: ''இந்த உணர்ச்சி எப்படி தானாக உண்டாகிறது என்றால் பொருட்களின் தாதுக்களுக்கு ஒன்றோடு ஒன்று சேர்ந்தால் இன்ன மாதிரியான தன்மை, செயல், மாறுதல் ஏற்படும் என்கின்ற தாதுக் கூட்டுத் தன்மைகள் இயற்கையாகவே இருக்கின்றன. எடுத்துக் காட்டாக மஞ்சளுடன் சுண்ணாம்பைச் சேர்த்தால், தானாக சேர நேரிட்டால் சிவக்கிறது. நீலமும், மஞ்சளும் சேர்ந்தால் பச்சையாகிறது. சில காற்றுகள் ஒன்று சேர்ந்தால் தண்ணீர் ஆகிறது. சில வஸ்துகள் ஒன்று சேர்ந்தால் விஷமாகிறது. சில வஸ்துகள் சேர்ந்தால் பொங்குகிறது; தளபுள, தளபுள என்று சத்தமிடுகிறது. சூடு ஆனால் சில வஸ்துகள் ஆவி ரூபமடைந்து மறைந்து போகிறது. சில ஆவி ரூபமடைந்து கடின வஸ்து ஆகிறது. இப்படியாக சில பொருட்கள் கூட்டினால் , தானாக சில பொருள் கூட்டுச் சேர்ந்தால், தானாக சில தன்மைகள் ஏற்படுகின்றன. இந்த தானாக ஏற்படும் தன்மைகளுக்குத்தான் நாம் தனிப் பெயர்கள் வைத்து தனித்தனி வஸ்து என்று கருதுகிறோம்.'' [8]

எனவே பெரியாரைப் பொறுத்தவரை மனிதனுக்கு உண்டாகும் உணர்ச்சிகள் சில தாதுப்பொருள்களின் கூட்டினால் உண்டாகும் மாற்றங்கள் போன்றதே என்பதற்கு மேல் வேறு எதுவும் இல்லை.

இதே பாணியிலேயே அவர் மனிதனின் பேச்சுக்கும் சிந்தனைக்கும் விளக்கமளிக்கிறார். சாவி கொடுக்கப்பட்ட ஒரு வாத்தியப் பெட்டி சரியான ராகம், தாளம், பல்லவியுடன் பல பாடல்களைப் பாடுவது போன்றதே சிந்தனை முதலானவை என்கிறார்.



அவர் கூறுகிறார் :

''வாத்தியப் பெட்டி (மியூசிகல் பாக்ஸ்) என்ற ஒரு பெட்டி இருக்கிறது. அதற்கு சாவி கொடுத்து வைத்துவிட்டால் இது ராகம், தாளம் ஆகியவைகளுக்கு ஏற்ற வண்ணம் பாட்டு வர்ண மெட்டுகளை ஒலிக்கச் செய்கிறது. ஒலி கேட்ட உடனே அதை நாம் இன்ன ராகம், இன்ன தாளம், இன்ன பாட்டின் மெட்டு என்று சொல்லலாம். இதன் காரணம் என்ன? வெறும் சப்தமாக இருந்தால் இயற்கை ஒலி என்று சொல்லலாம். ஆனால் தாளம், ராகம் சரியாய் ஒரு பல்லவி, ஒரு அனுபல்லவி, 2,3 சரணங்கள் உடன் குறிப்பிட்ட பாட்டு என்று சொல்லும்படியாக அந்தப் பெட்டி பாடுகிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம். அதன் அமைப்பின் காரணமாக ஏற்பட்ட ஒலியானது நமக்கு அப்படி தெரிகிறது என்பதுதானே ஒழிய அதற்கு 'நான்' என்ற உணர்வோ, உயிரோ, ஏதோ இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

அது போலவே மனித சரீர அமைப்பு – கூட்டு ஜீவன் என்கிற இயக்க சக்தியால் இயக்கப்படும்போது பேசுதல், நினைத்தல், பார்த்தல், கேட்டல், கோபித்தல், சிரித்தல், அழுதல், பாடுதல், அடித்தல், அதிசயம் உண்டு பண்ணுதல், ஆகாயக் கப்பல் பார்த்தல் முதலிய காரியங்கள் செய்யப்படுகின்றன. இதற்குத் தனியாக ஒரு ஜீவன் அல்லது உயிர் என்கிறதான வஸ்து தேவை இல்லை.'' [9]

ஆனால் மனிதனின் உணர்வும், பேச்சும், சிந்தனையும் பெரியார் கருதுவதைப் போன்று உருவாவதில்லை.

மனிதனின் தன்னுணர்வு விலங்கின் –நாயின் உணர்விலிருந்து எவ்வளவோ மேம்பட்டதாகும்.

மனிதனின் பேச்சும், சிந்தனையும் ஒரு வாத்தியப் பெட்டியில் இசை உண்டாவது போல் உண்டாவதில்லை. அது மனிதனுக்கும் புறநிலை உலகுக்கும் உள்ள தொடர்பின் விளைவு பொருளாகும்.

உணர்வு என்பது புலனுணர்ச்சி (Sensation), புலனறிவு (Perception), பகுத்தறிவு (conception), சிந்தனை. (thought), உணர்ச்சி (feeling), சித்தம் (will) ஆகிய பல்வேறு வகையான மூளை இயக்கங்கள் அடங்கிய பலதரப்பட்ட நிகழ்ச்சிப் போக்கு; அய்ம்புலன்கள் மூளை மூலம் புற உலகுடன் தொடர்பு கொள்வதால் ஏற்படும் புற உலகின் பிரதிபலிப்பு. மூளை செயலற்றுப் போனால் உணர்வுகளைப் பெறமுடியாது அல்லது அய்ம்புலன்கள் செயலற்றுப் போனால் கூட உணர்வுகளைப் பெற முடியாது என்பது விஞ்ஞான உண்மையாகும்.

படிப்பகம்

www.padippkam.com



மனிதன் மட்டுமல்ல விலங்குகள் கூட உணர்தல் பெற்றவை என்பது உண்மையே. ஆனால் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உணர்தலில் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. விலங்குகள் அதிகபட்சம் புலனறிவு என்ற மட்டத்துக்கு மட்டுமே வரமுடியும். ஆனால் மனிதன் உற்பத்திச் செயலில், உழைப்பில் ஈடுபட்டிருப்பவன் என்பதால் அதன் காரணமாக அவன் பொருட்களின் குறிப்பான மற்றும் பொதுவான பண்புகளைப் பிரித்தறியும் பகுத்தறிவைப் பெற்றிருக்கிறான். புலனுணர்வு, புலனறிவு, பகுத்தறிவு நடவடிக்கைகள் மூலம் பொதுவான கோட்பாடுகளை உருவாக்கும், தீர்ப்புகளை, முடிவுகளை, தத்துவங்களை, அனுமானங்களை உருவாக்கும் சிந்தனையாற்றலைப் பெற்றிருக்கிறான். இச்சிந்தனையின் அடிப்படையில் செயலுணர்வையும், லட்சிய உணர்வையும் அவன் பெற்றிருக்கிறான்.

இவை அனைத்தும் மனிதனுக்கு மட்டுமே உரியதாகும். மனிதன் ஒரு சமூகப்பிராணி, ஒரு சமுதாய வாழ்க்கையை – பொருளாதார வாழ்க்கையும், கலாச்சார ஆன்மீக வாழ்க்கையும் – வாழ்கிறான் என்ற உண்மையுடன் இணைந்ததாகும். இந்த உண்மை எதற்கும் பெரியாரின் தத்துவ விளக்கத்தில் இடமில்லாததால் அது இயந்திர வகைப்பட்ட பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து மீள முடியாததாக இருக்கிறது.

## 4

பெரியாரின் தத்துவக் கண்ணோட்டத்தில் கடவுள் மற்றும் மதம் பற்றிய கருத்துக்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

கடவுளைக் கற்பித்தவர்களும், மதத்தை உண்டாக்கியவர்களும் சமுதாய நலனில் அக்கறை கொண்ட சில பெரியோர்களே என்று கூறுகிறார் பெரியார்.

அவர்கள் ஏன் கடவுளைக் கற்பித்தார்கள்? மதத்தைப் படைத்தார்கள்?

பெரியார் கூறுகிறார் :

''மனிதனுக்கு மற்ற பிராணிகளைவிட அதிகமான அறிவு இருப்பதால் உணர்ச்சியின் சுயநலத்தை மாத்திரமே கவனிப்பதில் சென்று, அது விரிவடையும் போது சமுதாயத்தில் உள்ள மற்ற மனிதனுக்கும், ஜீவன்களுக்கும் தொல்லை உண்டாக்கக் கூடியதாய் ஏற்பட்டு விட்டால் அது சமுதாயத்திற்கு கேட்டை விளைவிக்கும் நலன் விளையாது என்பதாகவெல்லாம் கருதி அதற்குப் பரிகாரமாக கடவுள், மதம் வேண்டப்பட்டனவாகிவிட்டன.''[10]



மேலும் கூறுகிறார் :

''இன்றைய தினம் மனித சமுதாயத்திற்கு ஒன்றுகூடி வாழ்வதற்கும் அரசனும், சட்டமும், தண்டனையும் இல்லாவிட்டால் பாதுகாப்போ, சாந்தியோ, சமாதானமோ சிறிதாவது இருக்க முடியுமா? நாம் யாவரும் இந்த அளவுக்காவது வாழ்வது அரசாங்கம், சட்டம், தண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பினாலேயாகும். மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு இவை போதும் என்றாலும் ஒரு அளவுக்குத்தான் போதுமானதாகும். அரசாங்கத்தாலும் சட்டத்தாலும் மனிதனை மற்ற மக்களுக்கு நலமாகவும் தொல்லை இல்லாமலும் நடந்து கொள்ளும்படி செய்வது என்பது முழுவதற்கும் சாத்தியப்படாத காரியமாகும். சில காரியங்களை சட்டத்தால் செய்துவிட முடியாது.... மனித சுபாவம் இயற்கை சுதந்திரத்தோடு இருந்தால் ஒழுக்கமாகவோ, பிறருக்குத் தொல்லை இல்லாமலோ இருக்க முடியாததாகும். நிபந்தனையும், நிர்ப்பந்தமும் மனிதனுக்கு மிக மிக அவசியமானவையாகும். ஆதலால் அப்படிப்பட்ட நிர்ப்பந்தம், நிபந்தனைகள் அவ்வளவும் சட்டத்தால் செய்ய முடியாததாலேயே மனிதனுக்கு பயத்தை ஊட்டி நேர்பாதையில் செலுத்த கடவுள், மதம் ஆகிய நம்பிக்கை அவசியம் செய்ய வேண்டியதாயிற்று.''[11]

''பொதுவாக சொல்ல வேண்டுமானால், இயற்கைக்கு மாறான காரியங்கள் எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கடவுளும் மதமும் தேவையாகும். அதனாலேயே இயற்கைக்கு மாறுபட்ட தன்மையில் மக்கள் வாழவேண்டியது சமுதாய நலனுக்கு அவசியமானது என்று கண்டறிந்த பெரியோர்கள் கடவுளைக் கற்பிப்பதும் மதத்தை உண்டாக்குவதுமான காரியங்களில் ஈடுபட்டு வேலை செய்திருக்கிறார்கள்.''[12]

பெரியார் கருத்துப்படி மனிதன் இயற்கையிலேயே சுயநலமுள்ளவன்; மற்றவர்களுக்குத் தொல்லை இல்லாமலோ ஒழுக்கமாகவோ வாழமுடியாதவன். இது மனித சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கைக்கு கேட்டை விளைவிக்கும்; நன்மை விளைவிக்காது.

படிப்பகம்

www.padippkam.com



எனவே மனிதனை அச்சுறுத்தி நேர்பாதையில் செலுத்துவதற்காகவே கடவுளையும் மதத்தையும் சமுதாய நலனில் அக்கறை கொண்ட பெரியோர்கள் படைத்தார்கள்.

கடவுள், மதம் பற்றிய பெரியாரின் கொள்கையில் மனித சுயநலன், மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கை, மனித ஒழுக்கம் பற்றிய கருத்துக்களும், மனிதனை நேர்பாதையில் செலுத்துவது பற்றிய கண்ணோட்டமும் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால் இவை அனைத்தும் வரலாற்றுப் பொருள்முதல்வாத விஞ்ஞானத்துக்கு எதிரானதும், இயக்க மறுப்பியல் வகைப்பட்டதும், கருத்துமுதல்வாத அடிப்படையிலானதும், சுரண்டும் வர்க்கங்களுக்கு சேவை செய்வதும் ஆகும்.

முதலாவதாக மனித சுயநலன் பற்றிய அவருடைய கருத்துக் களைக் கவனிப்போம்.

மனித சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபட்டதிலிருந்து பகை வர்க்கங்களைக் கொண்டதாகவே இருந்து வருகிறது. புராதன பொதுவுடைமைச் சமுதாயத்திற்குப் பின் சமுதாயம் எல்லோரும் அறிந்தபடி ஆண்டான் –அடிமை சமுதாயம் என்றும், நிலப்பிரபுத்துவ சமுதாயம் என்றும், முதலாளித்துவ சமுதாயம் என்றும், சோசலிச சமுதாயம் என்றும் மாறி வந்துள்ளது. இச்சமூக அமைப்புகளில் முதல் மூன்று வகையிலும் சிறுபான்மையான சுரண்டும் வர்க்கங்களே ஆதிக்கத்திலிருந்தன. சோசலிச சமுதாயத்தில் பாட்டாளிவர்க்கம் ஆதிக்கத்திற்கு வந்தது.

ஆண்டான் - அடிமை சமுதாயத்தில் ஆண்டான்களும் அடிமை களும் பிரதான பகை வர்க்கங்கள். இதில் ஆண்டான் வர்க்கம் உழைக்கும் மக்களை அடிமைகளாக அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதிலேயே தன் நலனைக் காப்பாற்றிக் கொண்டது. இதற்கு மாறாக அடிமை வர்க்கம் ஆண்டான்களுக்கு எதிரான போராட்டத் திலேயே தன் நலனைப் பாதுகாத்துக் கொண்டதுடன், ஆண்டான்களை ஒழிக்கும் போராட்டத்திலேயே தனது விடுதலையைக் காணவேண்டி யிருந்தது.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுக்களும்,பண்ணை அடிமைகளும் பிரதான பகை வர்க்கங்கள். இதில் நிலப்பிரபுக்கள் உழைக்கும் மக்களை பண்ணையடிமைகளாக அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதன் மூலம் தமது வர்க்க நலனைப் பேணிக்கொண்டனர். இதற்கு மாறாக பண்ணை அடிமைகளான உழைக்கும் மக்கள்



நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டத்திலேயே தம்முடைய நலனைக் காப்பாற்றிக் கொண்டதுடன் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தைத் தூக்கி எறிவதிலேயே தமது விடுதலையைக் காண முடிந்தது.

முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளிகளும், தொழிலாளி களும் பிரதான பகை வர்க்கங்கள். இதில் முதலாளிகள் தொடர்ந்து தொழிலாளிகளை கூலியடிமைகளாக வைத்திருப்பதிலேயே தமது நலன் அடங்கியிருப்பதை அறிந்திருந்தனர். இதற்கு மாறாக தொழிலாளி வர்க்கம் முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்திலேயே தமது நலனைக் காத்துக் கொள்வதுடன் முதலாளி வர்க்கத்தை முற்றாகத் தூக்கி எறிந்து ஒழித்துக் கட்டும் போராட்டத்திலேயே தமது விடுதலை அடங்கி இருக்கிறது என்பதையும் அறிந்து கொண்டுள்ளது.

சோசலிச சமுதாயத்தில் முதலாளி வர்க்கம் வீழ்த்தப்பட்டு அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கரங்களுக்கு மாறிவிட்டது என்றாலும் முதலாளி வர்க்கத்தை பூண்டோடு ஒழித்துக் கட்டுவதிலேயே தனது பாதுகாப்பும், வளர்ச்சியும் இருக்கிறது என்பதை தொழிலாளி வர்க்கம் உணர்ந்துள்ளது. அதே நேரத்தில் வீழ்ந்த முதலாளி வர்க்கம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி சமுதாயத்தைத் தனது ஆதிக்கத்தில் கொண்டு வருவதிலேயே தனது நலன் பாதுகாக்கப்பட முடியும் என்பதை உணர்ந்துள்ளது.

எனவே சமுதாய வரலாறு முழுவதும்– சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டதிலிருந்து – பகை வர்க்கங்கள் தத்தம் நலனுக்காக மோதிக் கொண்டிருக்கும் வரலாறாகவே – வர்க்கப் போராட்ட வரலாறாகவே – இருந்து வருகிறது. இந்த மோதலால் ஒரு வர்க்கத்தின் நலன் மற்ற வர்க்கத்தின் நலனுக்கு எதிரானதாகவும், கேடும், தொல்லையும் விளைவிப்பதாகவுமே இருக்க முடியும் ; இருந்து வந்துள்ளது. ஆனால் இந்த மோதல் சமுதாய நலனுக்கு கேடு விளைவிப்பதாக அமையவில்லை.

பகை வர்க்கங்கள் தத்தம் நலனுக்காக மோதிக் கொண்டதன் விளைவாக – குறிப்பாக சுரண்டும் ஆதிக்க வர்க்கங்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் மோதியதன் விளைவாக சமுதாயம் மேலும் மேலும் வளர்ச்சியடைந்தே வந்திருக்கிறது என்பதே வரலாறு. ஆண்டான்களின் நலனுக்கு எதிராக அடிமைகள் மோதியதன் விளைவாகவே ஆண்டான் அடிமை சமுதாயம் வீழ்ந்தது. அதனிடத்தில் அதை விட உயர்ந்ததான நிலப்பிரபுத்துவ சமுதாயம் தோன்றியது. நிலப்பிரபுக்களை எதிர்த்து பண்ணை அடிமைகள்

படிப்பகம்

www.padippkam.com



மோதியதாலேயே நிலப்பிரபுத்துவ சமுதாயம் வீழ்ந்து அதனிடத்தில் முதலாளித்துவ சமுதாயம் தோன்றியது. முதலாளி வர்க்கத்தை எதிர்த்து பாட்டாளிகள் மோதியதாலேயே முதலாளித்துவ சமுதாயம் வீழ்ந்து சோசலிச சமுதாயம் மலர்ந்தது.

இங்கெல்லாம் நாம் காண்பது என்ன? அடிமைகளும், பண்ணையடிமைகளும், தொழிலாளி வர்க்கமும் ஆகிய உழைக்கும் மக்கள் தத்தம் நலனுக்காகப் போராடியதன் மூலம் ஒரு புதிய உயர்ந்த சமுதாய அமைப்பைத் தோற்றுவித்து வந்திருக்கிறார்கள் என்பதுதான்; அடக்கி ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட உழைக்கும் மக்கள், சுரண்டும் அடக்கி ஒடுக்கும் வர்க்கங்களின் நலனுக்கு எதிராகப் போராடுவது என்பது வரலாற்றில் சமுதாய நலனுக்கு கேடு விளைவிப்பதாக இருந்ததில்லை; மாறாக மனிதகுலத்துக்கே நன்மை விளைவிப்பதாகவே இருந்து வந்திருக்கிறது என்பது தான்.

அதே நேரத்தில் சுரண்டும் வர்க்கங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகவே இருந்து வந்துள்ளன. ஆண்டான் -அடிமை சமுதாயத்தில் அச்சமுதாய அமைப்பைக் கட்டிக்காப்பது ஆண்டான்களின் நோக்கமாக இருந்தது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தைக் கட்டிக்காப்பதே நிலப்பிரபுக்களின் நோக்கமாக இருந்தது. முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளித்துவ சமுதாயத்தை பேணிப் பாதுகாப்பதும், சோசலிச சமுதாயத்தில் முதலாளித்துவத்தை மீட்டமைப்பதும் முதலாளி வர்க்கத்தின் நோக்கமாக இருந்தது. ஏனெனில் இவ்வர்க்கங்களின் உயிர்வாழ்க்கையும் நலனும் அந்தந்த சமுதாய அமைப்பைக் காப்பதுடன் பிணைந்திருந்தது.

எனவே சுரண்டும் வர்க்கங்களின் சுயநலன் எப்போதும் சமுதாய மாற்றத்தை எதிர்ப்பதாகும். இதன் காரணமாக சமுதாய வளர்ச்சிக்குத் தடையானதாகவும் இதன் காரணமாக சமுதாயத்தில் சகல பிரிவு மக்களுக்கும் எதிரானதாகவும் தொல்லை விளைவிப்பதாகவும், மனிதகுல முன்னேற்றத்துக்கே தடையானதாகவுமே இருந்து வந்திருக்கிறது.

இவ்வாறு சமுதாய வரலாறு முழுவதும் சுரண்டும் வர்க்கத்தின் நலனும், சுரண்டப்படும் வர்க்கத்தின் நலனும் வெவ்வேறானதாகவும் வரலாற்றில் வெவ்வேறு பாத்திரமாற்றுவதாகவும் இருந்து வந்திருக்கின்றன. எனவே மனிதனின் சுயநலன் பற்றி யாரும் பொத்தாம் பொதுவாக பேசமுடியாது. மாறாக சுரண்டும் வர்க்கத்தின் நலனையும், சுரண்டப்படும் வர்க்கத்தின் நலனையும் அவை சமுதாய வரலாற்றில் ஆற்றும் வெவ்வேறு பாத்திரங்களையும் பிரித்தே பேச முடியும். ஒரே நேரத்தில் ஒருவர் சுரண்டும் வர்க்கங்களின் நலனையும் சுரண்டப்படும் வர்க்கங்களின் நலனையும் ஆதரிக்க முடியாது; ஒன்றை ஆதரிப்பவர் மற்றொன்றை எதிர்ப்பவராகவே இருக்க முடியும். ஆனால் பெரியாரின் தத்துவக் கண்ணோட்டத்தில் இந்த விசயங்களுக்கெல்லாம் இடம் இல்லாததால் அவர் மனிதனின் சுயநலன் பற்றியும் அது மனித சமுதாயத்துக்கு கேடு விளைவிப்பது பற்றியும் பிறருக்குத் தொல்லை விளைவிப்பது பற்றியும் பொத்தாம் பொதுவாகப் பேசுகிறார்.



நமது கேள்வி இதுதான். பெரியார் மனித சுயநலன் என்று பொத்தாம் பொதுவாகப் பேசுவதன் மூலம் எந்த வர்க்கத்தினுடைய நலனைக் குறிப்பிடுகிறார்? எந்த வர்க்கத்தின் நலனை ஆதரிக்கிறார்?

இரண்டாவதாக – கடவுள், மதம் பற்றிய தனது கொள்கையில் மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கை பற்றி மிகுந்த அக்கறையை வெளிப் படுத்தியிருக்கிறார் பெரியார். மனித சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கை என்று அவர் எதை அர்த்தப்படுத்துகிறார்? மனிதர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அடித்தளத்திலும் (உற்பத்தித் துறையிலும்) மேல் கட்டுமானத்திலும் (கருத்துக்கள், நிறுவனங்களிலும்) தமக்குள் திட்டவட்டமான உறவுகளுடன் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதையே ஆகும். ஒவ்வொரு சமுதாய அமைப்பும் மனிதர்களுக்கிடையே இத்தகைய திட்டவட்டமான உறவுகளைக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த திட்டவட்டமான உறவுகள் எப்போதும் ஒரே மாதிரி திட்டவட்டமாக இருப்பதில்லை. சமுதாய வளர்ச்சிக்குத் தேவைப்படும் போது இந்த திட்டவட்டமான உறவுகள் மேலும் மேலும் மற்றொரு திட்டவட்டமான உறவாக மாற்றியமைக்கப்பட்டு வந்துள்ளன. ஆண்டான் அடிமை சமுதாயத்தின் திட்டவட்டமான உறவுகள் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் திட்டவட்டமான உறவுகளாகவும், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் திட்டவட்டமான உறவுகள் முதலாளித்துவ சமுதாயத்தின் திட்டவட்டமான உறவுகளாகவும், முதலாளித்துவ சமுதாயத்தின் திட்டவட்டமான உறவுகள் சோசலிச சமுதாயத்தின் திட்டவட்டமான உறவுகளாகவும் மேலும் மேலும் உயர்ந்தகட்ட திட்டவட்டமான உறவுகளாக மாறி வந்துள்ளன.

இவ்வாறு மனித சமுதாயத்தின் வரலாற்றில் ஒரு வகையான திட்டவட்டமான உறவின் அடிப்படையில் அமைந்த கூட்டுவாழ்க்கை

படிப்பகம்

www.padippkam.com



ஒழியும்போது, அதைவிட உயர்ந்தமட்ட உறவுகளைக் கொண்ட கூட்டு வாழ்க்கை உருவாகி வந்திருக்கிறது. இதில் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களின் போராட்டம், சிதைந்து வரும் பிற்போக்கான சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கையைத் தகர்த்துவிட்டு புதிய உயர்ந்த கட்ட சமுதாயக் கூட்டு வாழ்க்கையை அமைப்பதில் உந்துசக்தியாக செயல்பட்டு வந்துள்ளது; சிதைந்துவரும் சமுதாய அமைப்பின் பாதுகாவலனாக விளங்கும் அரசு, சட்டம், நீதி ஆகியவற்றைத் தகர்த்தெறிவதன் மூலம் இதைச் சாதித்து வந்துள்ளது. அதே நேரத்தில் சுரண்டும் ஒடுக்கும் வர்க்கங்கள் சிதைந்து வரும் சமுதாயத்தைக் கட்டிக்காக்கும் முயற்சியில் எப்போதும் இதற்கு எதிராகவும், தடையானதாகவுமே இருந்து வந்துள்ளன. இதற்கு உதவும் சாதனங்களாகவே சட்டம், அரசாங்கம், நீதி, தண்டனை யாவும் இருந்து வந்துள்ளன.

எனவே மனித சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கையைப் போற்றுவது பற்றி பொத்தாம் பொதுவாக ஒருவர் பேச முடியாது. மாறாக சிதைந்து வரும் சமுதாயக் கூட்டு வாழ்க்கையையா? அல்லது அதைவிட உயர்ந்தமட்ட புதிய சமுதாயக் கூட்டு வாழ்க்கையையா? எதை ஆதரிப்பது என்பது பற்றி ஒருவர் தேர்ந்தெடுத்தே பேசமுடியும். ஆனால் பெரியாரின் தத்துவக் கண்ணோட்டத்தில் இந்த உண்மைகளுக்கு இடமில்லை. எனவே அவர் மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கை பற்றி பொத்தாம் பொதுவாகவே கவலை தெரிவிக்கிறார். இங்கு நமக்கு எழும் கேள்வி இதுதான் –இதன் மூலம் அவர் எந்த சமுதாயக் கூட்டு வாழ்க்கையைக் குறிப்பிடுகிறார்? எந்த சமுதாயக் கூட்டு வாழ்க்கையை ஆதரிக்கிறார்? சுரண்டும் ஒடுக்கும் வர்க்கங்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்ட சிதைந்துவரும் கூட்டு வாழ்க்கையைக் கொண்ட பழைய சமுதாய அமைப்பையா? அல்லது பெரும்பான்மை உழைக்கும் மக்களின் நலத்திற்குத் தேவையான அவர்கள் போராடும் உயர்ந்தமட்ட கூட்டு வாழ்க்கையை அளிக்கும் புதிய சமுதாய அமைப்பையா?

மூன்றாவதாக மனித சமுதாயம் ஒழுக்கமாகவோ, பிறருக்குத் தொல்லை இல்லாமலோ இருக்க முடியாது என்கிறார் பெரியார். ஏடறிந்த காலம் முதல் மனித சமுதாயம் இருவேறு முரண்பட்ட ஒழுக்கங்களைக் கொண்டு விளங்கி வருகிறது. ஆண்டான்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகள் போன்ற வர்க்கங்கள் உழைக்கும் மக்களை சுரண்டுவதையும் அடக்கி ஒடுக்குவதையுமே தமது ஒழுக்கமாகக் கொண்டவை. அதே நேரத்தில் உழைக்கும் மக்கள்



எல்லா சமுதாயங்களிலும் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடுவதையே ஒழுக்கமாகக் கொண்டவர்கள். இரண்டு ஒழுக்கங்களும் குணாம்ச ரீதியில் வேறானவை எதிரானவை. எனவே இந்த இரண்டு ஒழுக்கங்களையும் ஒருவர் ஒரே நேரத்தில் ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ முடியாது. ஆனால் பெரியார் மனித ஒழுக்கம் பற்றி பொத்தாம் பொதுவாகக் கூறுகிறார். நமது கேள்வி இதுதான்– இதன் மூலம் பெரியார் எந்த ஒழுக்கத்தைக் குறிப்பிடுகிறார்? சுரண்டும் வர்க்கங்களின் ஒழுக்கத்தையா? உழைக்கும் மக்களின் ஒழுக்கத்தையா? யாருடைய ஒழுக்கத்தை ஆதரிக்கிறார்? சுரண்டும் வர்க்கங்களின் ஒழுக்கத்தையா? உழைக்கும் மக்களின் ஒழுக்கத்தையா?

சுருக்கி சாராம்சமாகக் கூறுவதென்றால் பெரியார் மனித சுயநலன் பற்றியும், மனித ஒழுக்கம் பற்றியும், பொத்தாம் பொதுவாகக் கூறுவதன் மூலம் அவர் எந்த வர்க்கத்தின் பக்கம் நிற்கிறார்? சுரண்டும் வர்க்கத்தின் பக்கமா? உழைக்கும் வர்க்கத்தின் பக்கமா? என்பதே கேள்வி.

ஒருவர் உழைக்கும் மக்கள் பக்கம் நிற்பவரென்றால் அவர் நிபந்தனையற்ற முறையில் சுரண்டும் வர்க்கங்களை எதிர்த்து உழைக்கும் மக்கள் நடத்தும் போராட்டங்களை ஆதரிப்பவராக இருக்கவேண்டும்; அவர்கள் சுரண்டும் வர்க்கங்களின் நலன் பேணும் அரசு, சட்டம், நீதியைத் தூக்கி எறிந்துவிட்டு தமது சொந்த அதிகாரத்தை, சட்டத்தை, நீதியை நிறுவ உறுதுணையாய் இருப்பவராக இருக்க வேண்டும்.

ஆனால் பெரியாரின் நிலை என்ன? தொழிலாளிகளும் முதலாளிகளும் சண்டை சச்சரவில்லாமல் பரஸ்பர நல்லெண்ணமும், உறுதுணையும் கொண்டு தொழிலில் ஈடுபட வேண்டும் என்றும் அவ்வாறு இல்லையெனில் சமுதாயத்தின் பொதுநலனுக்கு தீங்கு நேரிடும் என்றும் போதிக்கிறார். அவர் கூறுகிறார் : ''...முதலாளியும், தொழிலாளியும் கீரியும் பாம்பும் போல எப்போதும் சண்டை போட்டுக் கொண்டிருப்பதால் உற்பத்திக் குறைச்சலும், விலைவாசி உயர்வும் ஏற்பட்டு மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன? முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருசாராருக்கும் பொறுப்பும், நாணயமும் ஒருவருக்கொருவர் பரஸ்பர நல்லெண்ணமும் நல்லுறவும் இல்லாத வாழ்வு பெருகுவது பொது நலத்திற்கும், ஒழுக்க வளர்ச்சிக்கும் கேடேயாகும். இருசாராருமே தாங்கள் பொதுமக்களின் தர்ம கர்த்தர்கள் என்பதாகக் கருதுவதோடு தங்கள் தொழிலின்

படிப்பகம்

www.padippkam.com



காரியத்தைத் தங்கள் தங்கள் சொந்த காரியம் போல் பொறுப்புடன் கருதும்படியான நிலை ஏற்பட வேண்டும். அப்போதுதான் நாட்டில் செழிப்பும் மக்களுக்கு திருப்தியான வாழ்வும் ஒழுக்க உயர்வும் ஏற்பட முடியும்.''[13]

இதன் பொருள் தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராகப் போராடக் கூடாது; உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் தொடர்ந்து முதலாளிகளின் உடைமையாகவே இருக்கும்; அவர்களுக்கு தொழிலாளிகள் தொடர்ந்து கூலியடிமைகளாக நீடிக்க வேண்டும்; இவ்வாறு தொழிலாளி – முதலாளிகளுக்கு இடையில் நல்லுறவும் பரஸ்பர நல்லெண்ணமும் நிலவ வேண்டும் என்பதேயாகும். அதாவது முதலாளித்துவ சமுதாயக் கூட்டு வாழ்க்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதே பெரியாரின் கருத்தாகும்.

எனவேதான் அவர் தொழிலாளி வர்க்கத்துக்கு முதலாளிகளை எதிர்த்துப் போராடும் ஒழுக்கத்தையல்லாமல் அவர்களுக்கு விசுவாசமான கூலியடிமையாக இருக்கும் ஒழுக்கத்தைப் போதிக் கிறார். அதற்காகவே தொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும் என்கிறார். ''நல்ல தொழிலாளர் சங்கம் என்று ஒன்று இருக்க வேண்டும் என்றால் அது முதலாளியிடத்தில் விசுவாசம், சொந்தப் பொறுப்பு போலக் கருதி தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது முதலியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்''[14] என்பது அவரது தொழிற்சங்க இயக்கப் பிரகடனம் ஆகும்.

இன்றுள்ள சட்டம், நீதி, அரசாங்கம் அனைத்தும் உழைக்கும் மக்களை ஒடுக்கி சுரண்டும் வர்க்கங்களைப் பாதுகாப்பதற்காக இருப்பவை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. வரலாற்றுப் பொருள்முதல்வாத விஞ்ஞானம் கற்றுத் தரும் அரிச்சுவடிப்பாடம். எனவே உழைக்கும் மக்கள் பக்கம் நிற்கும் யாரும் இந்த அரசாங்கம், சட்டம், நீதியில் பாதுகாப்புத் தேட முடியாது. ஆனால் பெரியாரின் நிலை என்ன? நாம் எல்லாம் இந்த அளவுக்காவது வாழ்வது சட்டம், அரசாங்கம், அதன் தண்டனை ஆகியவற்றின் பாதுகாப்பினாலேயே என்கிறார் பெரியார். இதன் மூலம் அவர் யார் பக்கம் நிற்கிறார் என்பதை மட்டுமல்ல அவர் யார் என்பதைக் கூட வெளிப்படுத்தி விடுகிறார்.

தொகுத்துப் பார்த்தால் மனித சுயநலம், மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கை, மனித ஒழுக்கம் பற்றிய பெரியாரின் கருத்துக்கள் – மேலோட்டமாகப் பார்த்தால் பொதுவானவை போல் தோன்றும்



கருத்துக்கள் – உண்மையில் சுரண்டும் வர்க்கங்களின் நலன்காக்கும், அவர்களுடைய நலனைப் பிரதிபலிக்கும் கருத்துக்களே என்பதை அறியலாம்.

மனிதனை நேர்பாதையில் செலுத்துவதைப் பற்றிய அவருடைய கண்ணோட்டம் இதை மேலும் தெளிவுபடுத்தும்.

## 5

மனிதனை அச்சுறுத்தி நேர்பாதையில் செலுத்துவதற்காகவே கடவுளையும், மதத்தையும் சமுதாய நலனில் அக்கறை கொண்ட பெரியோர்கள் படைத்தார்கள் என்று கூறும் பெரியார் வாழ்நாள் முழுவதும் கடவுளுக்கும் மதத்துக்கும் தீவிரமான எதிரியாகத் திகழ்ந்தார்.

ஆனால் பெரியாரின் கடவுள் - மத எதிர்ப்பு, கடவுளும் மதமும் தோன்றுவதற்கும் நிலவுவதற்கும் காரணமாக இருக்கும் அடிப்படைகளுக்கு எதிரானதாக இல்லை, ஏன்? அதைப் புரிந்து கொண்டதாகக் கூட இல்லை.

மதம் என்பது 'ஒடுக்கப்பட்ட ஜீவனின் பெருமூச்சு' 'மக்களுக்கு வாய்த்த அபினி' 'மக்களின் மாயையான ஆனந்தம்'[15] என்றார் மார்க்ஸ்.

சுரண்டும் வர்க்கங்களின் ஆதிக்கத்தில் இருக்கும் சமுதாயத்தில் தமது எதிர்கால வாழ்க்கை பற்றிய நம்பிக்கையை இழந்துவிட்ட மக்களுக்கு தமது கட்டுத்தளைகளை மறைக்கும் கற்பனை மலர்களாக மறு உலகு பற்றிய மனோ கற்பிதங்களையும், மாயையான ஆனந்தத்தையும் தரும் அபினியாக விளங்கியது மதம்.

கட்டுத்தளைகளை மறைக்கும் கற்பனை மலர்கள் பிடுங்கி எறியப்பட வேண்டும்; மாயையான ஆனந்தம் ஒழிக்கப்படவேண்டும். எதற்காக? எவ்விதமான மன ஆறுதலும், மனோ கற்பிதமும் இல்லாமல் மனிதன் அந்தக் கட்டுத்தளைகளை மாட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. அவன் அந்த தளைகளை உதறித்தள்ளி ஜீவனுள்ள மலர்களைப் பறித்தெடுக்கவேண்டும். எதார்த்தமான ஆனந்தத்தைப் பெறவேண்டும் என்பதற்காக.

ஆனால் கடவுளுக்கும், மதத்துக்கும் எதிரான பெரியாரின்

படிப்பகம்

www.padippkam.com



விமர்சனம் இத்தகையதல்ல. அது கற்பனை மலர்களை பிடுங்கி எறிய விரும்புகிறது. மாயையான ஆனந்தத்தை ஒழிக்க விரும்புகிறது. அதே நேரத்தில் அது கட்டுத்தளைகளை உதறித் தள்ளி ஜீவனுள்ள மலரைப் பறித்தெடுக்கவும், எதார்த்தமான ஆனந்தத்தைப் பெறவும் மனிதனுக்கு வழிகாட்டும் திறன் பெற்றதாக இல்லை.

கடவுளும், மதமும் சில பெரிய மனிதர்களால் படைக்கப்பட்டு பரப்பப்பட்டது என்று அதன் தோற்றம் வளர்ச்சி பற்றி பெரியார் கருதுகிறார். எனவே அதற்கு எதிரான பிரச்சாரங்கள் மூலமாகவே கடவுளையும், மதத்தையும் ஒழித்துவிட முடியும் என அவர் நம்புகிறார்.

ஆனால் கடவுளும் மதமும் தோன்றுவதற்கும் அது நிலவுவதற்குமான காரணம் அவ்வளவு எளிமையானதல்ல.

'எல்லா மதங்களும் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் புறசக்திகளைப்பற்றி அவர்களின் மனதில் ஏற்படும் வினோதமான பிரதிபிம்பமே; மண்ணுலக சக்திகள் இயற்கை கடந்த சக்திகளின் வடிவத்தை ஏற்கும் ஒரு பிரதிபிம்பமே'[16] என்று ஏங்கெல்ஸ் கூறினார்.

மனிதர்களின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்றவையாக இருக்கும் புற சக்திகளே கடவுளும், மதமும் நிலவுவதற்கான அடிப்படைக் காரணமாகும். இச்சக்திகள் மனிதனின் ஆதிக்கத்தின் கீழ் வரும்வரை, மனிதனின் அன்றாட வாழ்க்கை முழுவதும் அவனாலேயே கட்டுப்படுத்தப்படும் நிலை தோன்றும் வரை கடவுளும் மதமும் நீடிப்பதற்கான அடிப்படை தொடர்ந்து நிலவும்.

மனித சரித்திரத்தின் தொடக்கத்தில் இயற்கை சக்திகளே மனிதர்களின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் புற சக்திகளாகத் திகழ்ந்தன. திடீரென வெடித்துக் குமுறும் எரிமலையும், சீறிப்பாயும் காட்டாற்று வெள்ளமும்,பற்றிப்படரும் காட்டுத் தீயும், புயலும், கடற்கொந்தளிப்பும், கொடிய விலங்குகளின், நச்சரவங்களின் திடீர்த்தாக்குதல்களும் இவை போன்ற யாவும் மனிதனின் அன்றாட வாழ்க்கையை நிலைகுலையச் செய்யும் புற சக்திகளாக இருந்தன. இவைபற்றிய அச்சம், அறியாமையின் காரணமாக இந்த மண்ணுலக சக்திகள் இயற்கை கடந்த சக்திகளின் வடிவமேற்று மதமாக, கடவுளாகப் பிரதிபலித்தன.



ஆனால் வெகு சீக்கிரத்திலேயே இந்த இயற்கை சக்திகளுடன் சமுதாய சக்திகளும் மனிதனின் அன்றாட வாழ்க்கையினைக் கட்டுப்படுத்தும் புறசக்தியாக செயல்படத் தொடங்கின. சமுதாய சக்திகள் என்பது வர்க்க சமுதாயத்தில் மனிதர்களுக்கு இடையே நிலவும் உறவுகளாகும், இந்த உறவுகள் பொருளுற்பத்தி நிலைமைகளால், உற்பத்தி சாதன உடைமை முறைகளால் உருவானதாகும்.

இயற்கை சக்திகள் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக ஓரளவு (முற்றிலும் அல்ல) மனிதனின் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கின்றன. சமுதாய சக்திகள் கூட நவீன முதலாளித்துவ சமுதாயத்தில் மனிதனின் கட்டுப்பாட்டிற்குள் வந்திருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் அது உண்மையல்ல.

மனிதனால் உருவாக்கப்பட்ட உற்பத்தி சாதனங்களும் பொருளுற்பத்தி நிலைமைகளுமே மனிதனுக்கு அன்னியமான புறநிலை சக்திகளாக இருந்து மனிதன் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. முதலாளித்துவ சமுதாயத்தில் அது என்னதான் திட்டமிட்ட பொருள் உற்பத்தியைப் பற்றிப் பேசினாலும் இது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அடிக்கடி தோன்றும் பொதுநெருக்கடியைத் தடுத்து நிறுத்த முடியாது; தொழிலாளர்களை வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருந்தும், அனாதரவான நிலையிலிருந்தும் பாதுகாக்க முடியாது; நஷ்டத்திலிருந்தும், பெரும் கடன் சுமையிலிருந்தும் திவாலாகும் நிலையிலிருந்தும் முதலாளிகளைக் கூட அது காப்பாற்றமுடியாது. மனிதன் ஒன்று நினைக்க கடவுள் (அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் அன்னியமான ஆதிக்கம்) வேறொன்றை முடிக்கிறது என்பது முதலாளித்துவ சமுதாயத்தில் எதார்த்தமான நிலையாகும்.

எனவே கடவுள், மத நம்பிக்கைகளை ஒழிக்கவேண்டுமானால் மனிதனாலேயே உருவாக்கப்பட்டது என்றாலும் மனிதனுக்கு அன்னியமாக நின்று மனிதன் மீது ஆதிக்கம் செலுத்திவரும் முதலாளித்துவ உற்பத்திமுறை ஒழிக்கப்பட வேண்டும். உற்பத்தி சாதனங்களில் தனியுடைமையை ஒழித்து எல்லா உற்பத்தி சாதனங்களையும் சமுதாயமே தன்னுடைமையாக்கி அவற்றைத் திட்டமிட்ட அடிப்படையில் உபயோகிப்பதன் மூலம் சமுதாயம் தன்னைத்தானே விடுவித்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் தமக்குத்தாமே உற்பத்தி செய்து கொண்ட, எனினும் தமக்கே தடுத்து

படிப்பகம்

www.padippkam.com



நிறுத்த முடியாத அன்னிய சக்தியாக நின்று தம்மையே கட்டுப் படுத்துகின்ற உற்பத்தி சாதனங்களால் விளைந்த கட்டுத் தளையிலிருந்து சமுதாயத்தின் அங்கத்தினர்களும் சமுதாயத்தோடு விடுதலை பெற முடியும். அப்போதுதான் மனிதன் வெறுமனே நினைப்பதோடு மட்டுமல்லாமல், நினைப்பதை அவனே முடிப்பவனாக முடியும். அந்தக் காலத்தில்தான் மதத்தில் இன்னும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிற அன்னியமான அந்த கடைசி சக்தியும் மறைந்து ஒழியும். அத்துடன் மதத்தின் பிரதிபிம்பமும் தானே மறைந்து விடும். ஏனெனில் அதற்குப் பின் பிரதிபலிப்பதற்கு எதுவும் இருக்காது.

ஆனால் இதைச் சாதிப்பதற்கு, அதாவது ''சமுதாய சக்திகளை சமுதாயத்தின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு வெறும் அறிவு மட்டும் போதாது. இதற்கு எல்லாவற்றையும் விட மிகவும் அவசியமானது ஒரு சமுதாய செயல்முறைதான்''[17] என்று ஏங்கெல்ஸ் சுட்டிக்காட்டுகிறார்.

அதாவது உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையை ஒழித்து சமுதாய உடைமையாக்கி திட்டமிட்ட பொருள் உற்பத்தியின் கீழ் விடுதலை பெற்ற சமுதாயத்தையும், சமுதாயத்தின் அங்கத்தினர் களையும் வழிநடத்துவதற்கு வெறும் அறிவு மட்டும் போதாது. மாறாக தனியுடைமை சக்திகளுக்கு எதிரான போராட்டம் – வர்க்கப் போராட்டம் என்ற சமுதாய செயல்முறை அவசியமாகும். முதலாளி வர்க்கத்தை எதிர்த்து அதை தூக்கியெறிந்து முற்றாக ஒழித்துக்கட்டும் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தின் மூலமாக மட்டுமே இதைச் சாதிக்க முடியும். இதுதான் அந்த சமுதாயச் செயல்முறையாகும்.

எனவே உண்மையிலேயே கடவுளையும், மதத்தையும் ஒழிக்க விரும்பும் ஒருவர் தனியுடைமையை ஒழித்து பொதுவுடைமை சமுதாயத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டு முதலாளி வர்க்கத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கப் போராட்டத்தைக் கட்டமைப்பவராக இருக்க வேண்டும்.

இந்தப் போராட்டம் தனியுடைமை சமுதாயத்தை ஒழித்து பொதுவுடைமை சமுதாயத்தை நிறுவுவதால் முதலாவதாக கடவுளும், மதமும் நிலவுவதற்குக் காரணமான சமுதாய நிலைமைகளை ஒழித்து விடுகிறது. இதன் மூலம் கடவுள், மத நம்பிக்கைகளுக்கு முடிவுகட்டி விடுகிறது. இரண்டாவதாக மறுஉலகு பற்றி கற்பனை மலர்களாக இருக்கும் எதிர்கால நம்பிக்கைகளை நிகழ்காலத்தின் ஜீவனுள்ள



மலர்களால் நிரப்பி விடுகிறது. மாயையான ஆனந்தத்தை எதார்த்தமான ஆனந்தத்தால் மாற்றி விடுகிறது.

இவ்வாறு கடவுள், மத ஒழிப்பு என்பது புதிய சமுதாயத்திற் கான வர்க்கப் போராட்டத்திற்கு முன் நிபந்தனையாக இல்லை. மாறாக புதிய சமுதாயத்திற்கான வர்க்கப் போராட்டம்தான் கடவுள், மத ஒழிப்புக்கு முன்னிபந்தனையாக இருக்கிறது. எனவேதான் வேறு எவரையும் விட கடவுளுக்கும், மதத்துக்கும் தீவிரமான எதிரிகளான மார்க்சியவாதிகள் (திரிபுவாதிகள் அல்ல) சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் லட்சியமாகக் கொண்டு வர்க்கப் போராட்டத்தைக் கட்டமைத்து வழி நடத்துவதையே தமது பணியாகப் கொண்டு உலகெங்கும் செயல்படுகிறார்கள்.

ஆனால் பெரியாரைப் பொறுத்தவரையில் அவருடைய நிலை இதற்குத் தலைகீழானதாகும்.

அவர் பல சமயங்களில் தனியுடைமை ஒழிப்பிலும், சமதர்மத்திலும் நம்பிக்கையும், ஆர்வமும் தெரிவித்திருக்கிறார் என்பது உண்மையே. என்றாலும் புதிய சமுதாயத்திற்கான வர்க்கப் போராட்டத்தை கடவுள், மத ஒழிப்புக்கான முன் நிபந்தனையாக அவர் எங்குமே கருதவில்லை. மாறாக கடவுள், மத ஒழிப்பை வர்க்கப் போராட்டத்தின் முன்னிபந்தனையாகக் கொள்வதன் மூலம் உண்மையில் வர்க்கப் போராட்டத்தையே புறக்கணித்து விடுகிறார்.

காரணம் அவர் கடவுள், மத நம்பிக்கைகள் நிலவுவதற்கான அடிப்படையாக விளங்கும் சமுதாயக் காரணிகளை அறிந்திருக்க வில்லை. இதனால் கடவுள், மத எதிர்ப்பு பற்றிய அவருடைய தத்துவக் கண்ணோட்டம் வெறும் கருத்துமுதல்வாதக் கண்ணோட்ட மாகவும் அவருடைய கடவுள், மத எதிர்ப்புக் கொள்கை வர்க்க சமரசக் கொள்கையாகவும் அமைவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

பெரியாருடைய கருத்தோட்டத்தில் மனிதனை நேர்பாதையில் செலுத்துவது என்பது புதிய சமதர்ம சமுதாயத்தைக் காண்பதற்காக வர்க்கப் போராட்டப் பாதையில் செலுத்துவது என்பதாக அல்லாமல், வர்க்க சமரச பாதையில் செலுத்துவது என்பதாக அமைந்து விட்டதற்கும்; கடவுள், மதவாதிகளின் வர்க்க சமரசப்பணி சமுதாய நலனுக்கான பணியாக, மனிதனை நேர்வழியில் செலுத்துவதற்கான நடவடிக்கையாக அவருக்குத் தெரிவதற்கும் இதுவே காரணமாகும்.

படிப்பகம்

www.padippkam.com



# 6

வர்க்கப் போராட்டமே மனிதகுல சரித்திரத்தின் உந்துசக்தி என்றும், முதலாளி வர்க்கத்தை எதிர்த்த பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தின் மூலமே சோசலிச சமுதாயத்தை அடையமுடியும் என்றும் மார்க்சியம் போதிக்கிறது. இந்த உண்மை நமது நாட்டுக்குப் பொருந்தாது என்று பெரியாரும் அவருடைய சீடர்களும் கருதுகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம் என்ன?

பிற நாடுகளில் பொருளாதார ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் மட்டுமே இருந்தன. எனவே அங்கே வர்க்கப் போராட்டத்தின் மூலம் பொருளாதார சமதர்ம சமுதாயத்தை அடைய முடியும். ஆனால் நமது நாட்டில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுடன் பிறப்பால் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் சாதியமுறைகளும் உள்ளன. இந்த சாதிமுறையை ஒழிக்காமல் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஒழிக்கமுடியாது. சாதிமுறையை ஒழிக்க வேண்டுமானால் அதற்கு ஆதாரமாக இருக்கும் மதத்தையும், கடவுளையும் ஒழிக்க வேண்டும். சாதி முறைக்கு ஆணி வேராக இருக்கும் பார்ப்பானை ஒழிக்கவேண்டும். இவற்றை ஒழிக்காமல் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஒழித்தால் பிறவியில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் சாதியைப் பயன்படுத்தி மீண்டும் பணக்காரர்கள் உருவாகி விடுவார்கள். எனவே எல்லாவற்றுக்கும் முன்னதாக சாதி, மதம், கடவுள் ஆகியவற்றையும் பார்ப்பானையும் ஒழிப்பதையே முதன்மையான பணியாக மேற்கொள்ள வேண்டும். இதற்கு வர்க்கப் போராட்டம் பயன்படாது என்று பெரியார் கருதுகிறார்.

அவர் கூறுகிறார்: "மேல் நாட்டில் சாதி இல்லாததால் அங்கு பொதுவுடைமைக்கு முதலில் வகுப்பு (வர்க்க) சண்டை துவக்க வேண்டியிருந்தது. இங்கு சாதி இருப்பதால் பொதுவுடைமைக்கு முதலில் சாதிச் சண்டை துவக்க வேண்டியதாகும்." [18]

அவர் மேலும் கூறுகிறார்: "பணக்காரத் தன்மைக்கு பார்ப்பனீயமும் மேல்சாதி – கீழ்சாதி தன்மையும் கடவுள் தன்மை யும்தான் காரணம். இவற்றை ஒழிக்காமல் பணக்காரர்களை ஒழித்தால் மறுபடியும் மறுபடியும் பணக்காரர்கள் முளைத்துக் கொண்டே



இருப்பார்கள். சாக்கடையையும், கொசுக்களையும் ஒழித்தால்தான் அழுக்குத் தண்ணீரையும், மலேரியா காய்ச்சலையும் ஒழிக்க முடியும். ஆகையால்தான் திராவிடர் கழகம் பணக்காரத் தன்மையை ஒழிக்க அஸ்திவார வேலை எனக்கருதி இதைச் செய்கிறது." [19]

மேலும் கூறுகிறார் : "சமூக சமதர்மம் ஏற்பட ஆசைப்படுகிற நாம்– சாதி பேதத்தை ஒழிக்க வேண்டும் என்று கருதுகிற நாம்– பொருளாதார சமதர்மத்துக்காகவே பிறவி சாதிகளை ஒழிக்க வேண்டும் என்றும், பிறவி சாதியை ஒழிப்பதற்கு அதற்கு ஆதாரமான மதத்தை ஒழிக்க வேண்டும் என்றும் சொல்கிறோம்." [20]

"நான் மனித பேதம் ஒழிய வேண்டுமானால் மதம் ஒழிய வேண்டும் என்கிறேன். அன்றியும் மதம் ஒழிந்த இடத்தில்தான் மனிதனின் பிறப்பு பேதம் புதைக்கப்படுகிறது. அது போலத்தான் பொருளாதார பேதம், செல்வ பேதம் ஒழிய வேண்டும் என்றால் அவைகளின் உற்பத்தி ஸ்தானம், அதாவது தோன்றும் இடம், காப்பு மூலம் ஒழிக்கப்பட வேண்டும். ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் கர்த்தாவும் காவலுமாக கடவுள் விளங்குகிறது... மனித சமுதாய சமதர்மத்துக்கு மதம் ஒழிக்கப்பட வேண்டியது எப்படி அவசியமோ அது போல பொருளாதார சமத்துவத்துக்கும் அதாவது பொருளாதார சமத்துவம் வேண்டுமானால் பொருளாதாரத்துக்கும் பேதத்தன்மை காப்புக்கும் ஆதாரமாய் இருக்கிற கடவுள் தன்மை ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகும்." [21]

"சாதியை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, சாதி முறையின் ஆணிவேராக இருக்கும் பார்ப்பானை ஒழிக்கும் முயற்சியே சமதர்மவாதிகளுக்கு முதற்கடமை என்பது நமது அபிப்பிராய மாகும்." [22]

ஆக பெரியார் கருத்துப்படி பொருளாதார சமத்துவம் சாதிக்கப்பட வேண்டுமானால் அதற்கு அஸ்திவாரமாக சாதி, மதம், கடவுள் ஆகியவையும் பார்ப்பானும் ஒழிக்கப்பட வேண்டும். இதனால் சாதியின் பெயரால் இருக்கும் தனியுரிமை ஒழிந்து 'அரைபாகம் பொதுவுடைமை' ஏற்பட்டுவிடும். "தனிஉடைமையை மாற்ற அதிக பாடுபடாமலேயே இந்த நாட்டில் பொதுவுடைமை ஏற்பட வசதி உண்டாகும்." [23]

இந்த நாட்டில் பொதுவுடைமையை உண்டாக்கும் வழி சாதி, மதம், கடவுள், பார்ப்பான் ஒழிப்பை முன்வைத்து அதற்கான இயக்கங்கள் நடத்துவதே என பெரியார் கருதுகிறார். அவ்வாறாயின்

படிப்பகம்

www.padippkam.com



சாதி, மதம், கடவுள் இவற்றையெல்லாம் ஒழிக்கும் வரை முதலாளி - தொழிலாளி போன்ற வர்க்கப் பிரச்சினைகளை என்ன செய்வது? இதில் பணி என்ன வகையாக இருக்கவேண்டும்? முதலாளிகளுக்கு எதிராக தொழிலாளர்களை அணி திரட்டிப் போராடச் செய்ய வேண்டுமா? அல்லது சமரசப்படுத்தி வைக்க வேண்டுமா? இதில் என்ன அணுகுமுறையை மேற்கொள்வது? பெரியாரைப் பொறுத்த வரை இந்த விசயத்தில் முதலாளிகள் - தொழிலாளிகளிடையே அவர்கள் இருதரப்பாரும் பங்காளிகள், கூட்டாளிகள் என்ற உறவை சுமுகமான உறவை ஏற்படச் செய்ய வேண்டும்; கணவன் மனைவி குடும்ப உறவைப் போல் இணக்கமான உறவை ஏற்படச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

அவர் கூறுகிறார்: ''எந்தக் காரணம் கொண்டும் முதலாளிக்கும்,தொழிலாளிக்கும் இன்றைக்கு இருக்கிற மாதிரி 'ஏழாம் பொருத்தம்' இருக்கக்கூடாது. இருவருக்குள்ளும் பரஸ்பரம் நல்லெண்ணமும், சுமுகமான உறவும், கூட்டுப்பொறுப்பும் ஏற்பட வேண்டும். இத்தன்மை ஏற்பட அடிப்படையில் மாறுதல் ஏற்பட வேண்டும். முதலாளியும், தொழிலாளியும் பங்காளிகள், கூட்டாளிகள் என்ற நினைப்பு ஏற்பட வேண்டும்.'' [24]

மேலும் கூறுகிறார் : ''முதலாளி - தொழிலாளி இருவரும் ஒன்று சேர்ந்தால்தான் உற்பத்தி செய்யமுடியும். உற்பத்தி நடக்க வேண்டும் என்றால் பணம், தொழில் இரண்டும் தேவை. உற்பத்தி மக்கள் நலனுக்கு உலக நலனுக்கு மிக மிக அவசியம் ஆகும் என்றாலும் முதல் (பணம்) இருந்தால்தான் உற்பத்தி தலைகாட்ட முடியும்.''

''முதலாளி- தொழிலாளி இருவரும் கணவன் - மனைவி போன்றவர்கள் ஆவார்கள். கணவனும் -மனைவியும் குடும்பம் நடத்தி பிள்ளை பெறுவது போல்தான் முதலாளியும் - தொழிலாளியும் சேர்ந்து தொழில் நடத்தி பண்டங்கள் உற்பத்தி செய்வதாகும். கணவன் - மனைவி ஒற்றுமையாக இருக்க வேண்டும்.'' [25]

இந்த நாட்டில் சாதி அமைப்பு இருப்பதால் மேலை நாடுகளைப் போல வர்க்கப் போராட்டத்தின் மூலம் சோசலிசத்தைக் கொண்டு வருவது என்ற கொள்கை பொருந்தாது என்று கூறும் பெரியார் இப்படி முதலாளி– தொழிலாளிகளுக்கு இடையே கூட்டாளி- பங்காளி உறவையும், கணவன்- மனைவி உறவையும் ஏற்படுத்துவதன் மூலம் எப்படி சோசலிசத்தைக் கொண்டு



வரப்போகிறார்? ஒரு வேளை 'செல்வந்தர்கள் ஏழைகளின் பாதுகாப்பாளர்களாக இருக்க வேண்டும்' என்று காந்தி கனவு காண்பது போல முதலாளி–தொழிலாளி உறவு கணவன்-மனைவி உறவாக அமைவது மூலம் சோசலிசம் அமைய வேண்டும் என்பது பெரியாரின் கனவா?

இது ஒரு புறம் இருக்க பெரியார் சாதி, மதம், கடவுள் ஒழிப்பு பற்றிப் பேசுவது உழைக்கும் மக்களை வர்க்கப் போராட்டத்திற்கு தயார்படுத்தவே, அதற்குத் தடையாக இருக்கும் மூடநம்பிக்கைகளை ஒழித்து அறிவூட்டவே என பெரியாரின் சீடர்களில் சிலர் வாதிடுவது நமக்குத் தெரியும். பெரியாரின் சாதி, மத, கடவுள் எதிர்ப்பு வர்க்கப் போராட்டத்திற்கு தயார்படுத்துவதற்கே என்றால் முதலாளி– தொழிலாளிகளிடையே பங்காளி - கூட்டாளி உறவும், கணவன் - மனைவி உறவும் உருவாகப் பாடுபடவேண்டும் என்பது எதற்காக? உண்மையில் பெரியாரின் சாதி, மத, கடவுள் ஒழிப்பு இயக்கம் வர்க்கப் போராட்டத்திற்கு தயார்ப்படுத்துவதற்கானதல்ல; மாறாக அது வர்க்க சமரசத்திற்கானதே என்பதையும், அதில் சாதி, மத, கடவுள் ஒழிப்புக்கான விருப்பப் பிரகடனத்தைத் தவிர அதற்கான எந்த வகையான விஞ்ஞானப்பூர்வமான கொள்கையும் இல்லை என்பதையும் அதைச் சற்று பரிசீலித்தால் புரிந்துகொள்ள முடியும்.

அவருடைய சாதி ஒழிப்புக் கொள்கையை எடுத்துக் கொள்ளுங்கள். சாதியை ஒழிக்கவேண்டுமானால் அதற்கு ஆதாரமாய் இருக்கும் மதம், கடவுளை ஒழிக்க வேண்டும் என்கிறார் பெரியார். மதமும், கடவுளும் சாதீயக்கருத்துக்களை ஆதரிக்கின்றன, வலியுறுத்துகின்றன, வாழ்க்கை முறையாகப் போதிக்கின்றன என்பதிலும், எனவே இவற்றுக்கு எதிராக பிரச்சாரங்கள், இயக்கங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதிலும் விவாதத்துக்கு இடமில்லை. ஆனால் இவை மட்டுமே சாதியை ஒழிக்கப் போதுமானதா? இல்லை பெரியார் வேறொரு இடத்தில் கூறுவது போல சாதிப் பெயர்களைப் பயன்படுத்துவதை தடை செய்வது, கலப்பு மணம் செய்வது, ஒரு சாதி மணத்தைக் கட்டுப்படுத்துவது, சாதிக்குறிகளைப் பயன்படுத்துவதை தடை செய்வது ஆகியவற்றைச் செய்வதன்மூலம் சாதியை ஒழித்துவிட முடியுமா? இவை அனைத்தும் மேலோட்டமானவை ஆகும். புண்ணை வைத்துக்கொண்டு சீழை அகற்றும் முயற்சியாகும். உண்மையில் சாதியை ஒழிக்க வேண்டுமானால் சாதி முறையினால் ஆதிக்கம் பெறுகின்றவர்களும் அதற்கான உற்பத்தி முறையும் ஒழிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சாதிமுறை முற்றாக வழக்கொழிந்து

படிப்பகம்

www.padippkam.com



போகும். இது அடிப்படையானது ஆகும்.

இதைப்பற்றி பெரியார் என்ன கூறுகிறார்? சாதி முறையினால் பார்ப்பான்தான் பயன் பெறுகிறான். சாதியை ஒழிப்பதனால் அவனுக்குத்தான் நஷ்டம். எனவே அவனை ஒழிக்க வேண்டும் என்கிறார். ஆனால் உண்மை என்ன? சாதிமுறையின் காரணமாக பிறவியிலேயே உயர்ந்தவன் என்று பார்ப்பான் உச்சாணிக் கொம்பிலே வைக்கப்பட்டிருக்கிறான் என்பது உண்மையே. அதே வேளையில் ஒவ்வொரு மட்டத்திலும் சமுதாயம் முழுவதும் வெவ்வேறு 'உயர்சாதி'க்காரர்கள் பிறவியிலேயே தாம் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று உரிமை கொண்டாடி வருகிறார்கள் என்பதும் உண்மையல்லவா? இன்னும் சொன்னால் நமது நாட்டில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். இங்கிருக்கும் 'மேல்சாதி'க்கார நிலப்பிரபுக்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களின் உழைப்பைக் கொள்ளையடிக்க, கூலியின்றி பறித்துக்கொள்ள தமது பிறவி சாதி மேன்மையைப் பயன்படுத்தி வருகிறார்கள். சாதியை ஒழிப்பதால் இந்த 'மேல்சாதி' நிலப்பிரபுக்களுக்கு நஷ்டம் இல்லையா? உண்மையில் கிராமப்புறங்களில் சாதியமைப்பைக் கட்டிக்காக்கும் அரணாக விளங்குபவர்கள் இந்த 'மேல்சாதி' (இவர்களில் பார்ப்பனர்கள் சிறு சதவீதமும் 'திராவிட' நிலப்பிரபுக்கள் பெருமபகுதியினரும் உண்டு) நிலப்பிரபுக்களே. இவர்கள் கிராமப் புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை சாதியின் பேரால் இழிவுபடுத்தி நடத்துவதுடன் கூலியின்றி உழைப்பைச் சுரண்டு கிறார்கள். அடிப்பது, கொலை செய்வது உட்பட அவர்கள் மீது எல்லாவித அடக்கு முறைகளையும் பலாத்காரங்களையும் பிரயோகித்து வருகிறார்கள். இந்த சுரண்டலுக்கும், ஆதிக்கத்துக்கும் ஆபத்து வந்து விடக் கூடாது என்று கருதி, வெவ்வேறு சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து விடாதபடிக்கு சாதிவெறியை மூட்டி விடுகிறார்கள்; சாதிக் கலவரங்களைத் திட்டமிட்டு தூண்டிவிட்டு சாதிமுறையைக் காப்பதில் கவனமாக செயல்படுகிறார்கள்.

நிலப்பிரபுக்கள் எல்லாம் கிராமப் புறங்களிலே இருப்பதினால் கிராமப் புறங்கள் அளவுக்கு நகர்ப் புறங்களிலே சாதிய வேறு பாடுகளோ, ஒடுக்குமுறைகளோ இல்லை என்றாலும் அங்கு கூட ஓட்டு வாங்குவதற்கும், பதவி பெறுவதற்கும், செல்வாக்கைக் காட்டுவதற்கும், சுயநலமிகள் நகர்ப்புற தொழிற்சாலைகள், அலுவலகங்களில் சாதி வேறுபாடுகளை உண்டு பண்ணி சண்டை



மூட்டிவிடுகிறார்கள் என்பதும், முதலாளிகளும், அதிகாரிகளும் கூட தமக்கு எதிரான போராட்டங்களை உடைக்க சாதியைப் பயன்படுத்து கிறார்கள் என்பதும் உண்மையே. இதற்குக் காரணம் நமது நாட்டின் நகரங்கள் எல்லாம் நாட்டின் முக்கால்வாசிக்கும் மேலே இருக்கும் கிராமங்களால் சூழப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து தான் நகரங்களில் இருக்கும் தொழிலாளர்களும், அரசியல்வாதிகளும், தொழில் அதிபர்களும், அதிகாரிகளும் வருகிறார்கள். பெரும்பாலும் அதிகாரிகளும் தொழில் அதிபர்களும் பெரும் நிலவுடைமைக் குடும்பப் பின்னணி கொண்டவர்களாகவும், தொழிலாளர்களும், வேறு வேலையாட்களும் சாதாரணக் குடும்பப் பின்னணி கொண்டவர் களாகவும் இயல்பாகவே அவர்களுடைய வசதியின் காரணமாக அமைகிறார்கள். எனவே கிராமப்புற ஆதிக்க உறவுகளே நகர்ப்புறங்களிலும் பிரதிபலிக்கின்றன என்றாலும் இங்கு நிலவுடைமை உறவுகள் நேரடியாக இல்லாததனால் கிராமப்புறங்கள் அளவுக்கு சாதிய வேறுபாடுகள், ஒடுக்குமுறைகள் நகர்ப்புறங்களில் இருப்பதில்லை.

எனவே சாதியை ஒழிக்கவேண்டுமானால் கடவுள், மதம், சாதியை எதிர்த்தும், பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்தும் பிரச்சாரமும், இயக்கமும் நடத்தினால் மட்டும் போதாது. அது இருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் நிலப்பிரபுத்துவ உடைமையை ஒழிக்கவேண்டும். இதற்கு நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டம் அவன் பார்ப்பானா, திராவிட சாதிக்காரனா என்று பார்க்காமல் அவனுடைய சாதித்திமிருக்கும், நிலவுடைமை ஆதிக்கத்துக்கும் எதிராக தொடுக்கப்பட வேண்டும். இது வர்க்கப் போராட்டமாகும். இதனால் நிலப்பிரபுத்துவம் ஒழிவதுடன் அதனால் நிற்கும் சாதியமும் ஒழியும். ஆனால் பெரியார் இதற்கு மாறாக சாதி நிலவுவதற்குக் காரணம் மதமும், கடவுளும், பார்ப்பானுமே எனக்கூறி அதற்கு எதிரான பிரச்சாரத்துடன் இயக்கத்துடன் நின்று கொள்கிறார். சாதி இருப்பதால் பார்ப்பானுக்குத்தான் லாபம் என்று கூறி அவனை மட்டுமே எதிரியாகக் காட்டுகிறார். சாதிக்கு காப்பரணாக இருக்கும் மற்ற சாதி நிலப்பிரபுக்களை எல்லாம் திராவிடன் என்றும் நம்மவன் என்றும் கூறி பாதுகாக்கிறார். சதிக்கு என்று ஒரு சாதி இருக்கிறது என்றும் அது உழைக்கும் மக்களை பிறவியிலேயே தாழ்ந்தவர்கள் என இழிவுபடுத்துகிறது என்றும் பார்ப்பனர்களைக் கூறும் பெரியார் மற்ற மேல் சாதிக்காரர்கள் கூட தம்மை தாழ்த்தப்பட்ட மக்களை விட பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்று கூறுவதையோ, அதைப்

படிப்பகம்

www.padippkam.com



பயன்படுத்தி அச்சாதியை சேர்ந்த நிலப்பிரபுக்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் உழைப்பைக் கூலிதராமல் சுரண்டிக் கொள்ளை யடிப்பதையோ, அவர்களை இழிவுபடுத்தி அடக்கி ஒடுக்குவதையோ சொல்லாமல் மறைக்கிறார். சாதிக்கு எதிரான போராட்டம் என்பது உண்மையில் நிலப்பிரபுக்களின் நிலவுடைமைக்கும், அவர்களுடைய சாதிய ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டம் என்பதை மறைத்து பார்ப்பானுக்கு எதிரான போராட்டம், கடவுள், மதத்துக்கு எதிரான போராட்டம் என்பதாகச் சுருக்கிவிடுகிறார். இதனால் பெரியாரின் சாதி ஒழிப்புக் குரல் பார்ப்பானுக்கு எதிராக சம அந்தஸ்து கோரி மேல்சாதி பணக்காரர்கள் எழுப்பும் குரலாக இருக்கிறதே தவிர முழுமையான சாதி ஒழிப்புக்கான குரலாக இல்லை.

சாதியை ஒழிக்க வேண்டும் எனில் கடவுளையும் மதத்தையும் ஒழிக்கவேண்டும் என்கிறார். கடவுளையும் மதத்தையும் எப்போது ஒழிக்க முடியும்? அதாவது எந்த நிலைமைகளில் கடவுள், மதம் இருக்க முடியாத நிலை உருவாகும்? மனிதனின் அன்றாட வாழ்க்கையை மனிதனே கட்டுப்படுத்தும் நிலை தோன்றும் வரையிலும் கடவுளையும், மதத்தையும் யாரும் எவ்வளவு பெரிய தீவிர பிரச்சாரங்களாலும் ஒழித்துவிட முடியாது. இதற்கு முதலாளித்துவ அராஜக உற்பத்தி ஒழிவதும், தனியுடைமைப் பொருளாதாரம் ஒழிவதும் அவசியமாகும். இதற்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் சோசலிச சமுதாயமும் அமைவது அவசியமாகும். இது முதலாளிகளை எதிர்த்த தொடர்ந்த விட்டுக்கொடுக்காத போராட்டம் இன்றி சாத்தியம் இல்லை. ஆனால் பெரியார் என்ன செய்கிறார்? முதலாளிகளும், தொழிலாளிகளும் கூட்டாளிகளாகவும், பங்காளிகளாகவும் இருப்பது பற்றி பேசுகிறார்; கணவன் மனைவி போல் குடும்பமாக வாழ்வது பற்றிப் பேசுகிறார்; வர்க்க சமரசம் பேசுகிறார். இந்நிலையில் முதலாளித்துவம் ஒழிய முடியுமா? முதலாளித்துவம் ஒழியாமல் கடவுளும், மதமும் ஒழிய முடியுமா? இவ்வாறு கடவுளும், மதமும் ஒழிவதற்கு எதிரான வர்க்க சமரசக் கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டே கடவுளையும் மதத்தையும் ஒழிக்கப் போவதாகக் கூறுவது விஞ்ஞானப்பூர்வமானது என்றோ பகுத்தறிவுப்பூர்வமானது என்றோ சொல்ல முடியுமா? ஆனால் பெரியார் அதற்கு மேலும் போய் இந்த விஞ்ஞானப்பூர்வமற்ற பகுத்தறிவுப்பூர்வமற்ற வழியில் மதத்தையும், கடவுளையும் ஒழிப்பது பற்றியும் அதன்மூலம் சாதியை ஒழிப்பது பற்றியும் பேசுகிறார்.



நிலப்பிரபுக்களை எதிர்க்காமலேயே சாதியை ஒழிக்கப் போவதாகக் கூறுவதும், முதலாளிகளுடன் சமரசம் செய்துகொண்டே கடவுளையும், மதத்தையும் ஒழிக்கப் போவதாகக் கூறுவதும்தான் பெரியாரின் சாதி, மதம், கடவுள் எதிர்ப்புக் கொள்கை. எல்லா கவனத்தையும் கடவுள், மதம், பார்ப்பானுக்கு எதிராக மட்டுமே திருப்பிவிட்டு நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் பாதுகாக்கும் கொள்கைதான் பெரியாரின் சாதி, மத, கடவுள் எதிர்ப்புக் கொள்கை.

## 7

தேசிய இனப்பிரச்சினை குறித்து பெரியாரியலின் பார்வை என்ன?

தேசம் என்றால் என்ன? என்ற ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு 'உண்மை' இதழ் (1.5.88) பின்வருமாறு பதில் கூறுகிறது. "ஒரு பொது மொழி, பொது நிலப்பகுதி, பொதுவான பொருளாதார வாழ்வு, ஒரு பொதுவான பண்பாடாக பிரதிபலிக்கும் உயிர்ப்பண்பு, இவற்றின் அடிப்படையில் அமைந்து வரலாற்று ரீதியாக உருவாகிய மக்கள் சமூகம் ஆகியவற்றைக் கொண்டது ஒரு தேசம் ஆகும். அனைத்து நாட்டு அரங்கில் தேசம் என்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட சரியான பொருளாகும் இது. இதன்படி இந்தியாவில் தமிழ்நாடு ஒரு தேசம் ஆகும். ஆந்திரா ஒரு தேசம் ஆகும். மகாராஷ்டிரம் ஒரு தேசம், ஒரிசா ஒரு தேசம் இது போல் இந்தியாவில் இன்னும் பல தேசங்கள் இருக்கின்றன."

சரிதான். இது தேசிய இனங்கள் பற்றிய மார்க்சிய வரையறை.

ஆனால் பெரியாரியலின் நிலை என்ன? தேசிய இனம் குறித்து 'உண்மை' இதழ் கூறும் மார்க்சிய வரையறையின் அடிப் படையில்தான் அதன் கொள்கைத் திட்டங்கள் அமைந்திருந்தனவா?

பெரியாரின் தனிநாடு கோரிக்கைகளைப் பரிசீலித்தால் பெரியாரியலுக்கும் தேசிய இனம் குறித்த மேற்குறித்த வரை யறைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

1938-39-ம் ஆண்டு வாக்கிலிருந்து பெரியார் திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்து தீவிரமான பிரச்சார இயக்கங்களை மேற்கொண்டிருந்தார். அவர் திராவிட நாடு என்று அர்த்தப்படுத்தியது

படிப்பகம்

www.padippkam.com



தற்போது உள்ள தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள் ஆகிய நான்கு தேசிய இனங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அப்போது இவற்றின் பெரும்பகுதி சென்னை மாகாணம் என்ற ஒரே மாகாணமாக பிரிட்டிஷ் காலனிய ஆட்சியின் கீழ் இருந்தது. இந்த நான்கு தேசியஇனங்களும் திராவிட இனம் (Race) என்ற ஒரே மரபினத்தைச் சேர்ந்தவையாகும். பெரியாரின் திராவிட நாடு கோரிக்கை இவ்வாறு ஒரு மரபின அடிப்படையில் அமைந்திருந்ததே தவிர தேசிய இன அடிப்படையில் அமைந்திருக்கவில்லை.

உண்மையில் அவர் மரபினத்திலிருந்து தேசியஇனத்தின் (Nation) தனிப்பண்புகளை வேறுபடுத்தி அறியவில்லை என்றே கூறவேண்டும். திராவிடநாடு பற்றிய அவருடைய விளக்கம் இதைத் தெளிவுபடுத்தும். அவர் கூறினார்:

''தமிழ்நாடு ஒரு தனி நேஷனாக (Nation) இருந்தது; இன்றும் இருக்கிறது. அதுதான் திராவிடம்.'' [26]

''தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளைத் தாய்மொழியாகப் பேசி வந்த மக்களையே மிகுதியாகக் கொண்ட நாடுகள் இன்று திராவிடம் என்று சொல்லப்படுவது யாவரும் அறிந்ததேயாகும். அந்த திராவிடம் பெரிதும் சென்னை மாகாணமாகவே இருந்ததுடன் மற்றும் சிறிது சென்னை மாகாணத்தைத் தொட்ட சுற்றுப்புறமாகவும் இருக்கிறது.''

''இந்த விஸ்தீரணத்திற்கு உட்பட்ட முஸ்லீம்களும், கிருத்தவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனரல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்கின்றவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப்பின் கீழ் தான் வருவார்கள்.''

''மேற்கண்ட விளக்கத்திற்கு உட்படாத தமிழரல்லாதவர்கள் இருந்தால் அதைப்பற்றி என்ன என்று கேட்பீர்களானால் அவர்களுக்குள்ள உரிமைகள், அவர்கள் முன்னேற்றத்துக்கு ஏதுவான அபிலாசைகள் நியாயப்படி காக்கப்படும் என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை.''

'''திராவிட நாட்டில் பல மொழிகள் இருக்கின்றனவே என்றால் இப்போது காங்கிரஸ் தீர்மானித்திருப்பதை அடிப்படையாகக் கொண்டே திராவிட தேசம் என்பது அவசியப்பட்டால் திராவிட மொழிவாரியான மாகாணங்களைக் கொண்டதாகவும் இருக்கும்.''



''இதை எப்படி காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று கேட்கிறீர்கள். பூர்ணசக்தி திராவிடத்துக்கு ஏற்பட்டு சர்வதேச சங்கத்தோடு (League of Nation) ஒரு தனி சுயேச்சை நாடாக (Independant Country) ஆகும்வரை சிலோன், பர்மா போலும் அல்லது சில சுதேச சமஸ்தானங்களான தனி சுயநிர்ணய நாடுகள் போலும் பிரிட்டனுடைய பாதுகாப்பின் மூலம் காக்கப்படும்.'' [27]

பெரியாரைப் பொறுத்தவரை தமிழ்நாடு என்பதும் திராவிட நாடு என்பதும் ஒன்றே. தமிழ்நாடு என்பது திராவிடத்தில் இருக்கும் ஒரு தேசிய இனம் என்றோ திராவிடத்தில் நான்கு தேசிய இனங்கள் இருக்கிறது என்றோ அவர் கருதவில்லை. இன்னும் சொன்னால் அவர் திராவிடத்தில் இருக்கும் மொழிகளை தனி தேசிய இன மொழிகள் என்று கூட கருதவில்லை. அவர் ஒரு முறை கூறும்போது ''ஒரு மொழிக்கு சென்னை ராஜ்யத்தில் நான்குபெயர்கள் வழங்குகின்றன. அவை முறையே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று சொல்லப்படுகின்றன'' [28] என்றார்.

பெரியாரின் திராவிட நாடு கோரிக்கையை பொறுத்தவரை முதலில் திராவிட நாட்டை வடநாட்டிலிருந்து பிரித்து தனியாக பிரிட்டிஷ் அரசின் பாதுகாப்பு நாடாக அமைப்பது என்பதாகவே இருந்தது. அதற்காகவே அவர் பிரச்சாரம் மேற்கொண்டு வந்தார். இதைப்பற்றி அவர் கூறினார்: ''வெள்ளையனுக்கு அடிமையானதால் அதிக நஷ்டம் இருந்தாலும் சிறிது லாபமாவது பெற்று நாம் மனிதன் என்பதை உணர்ந்திருக்கிறோம். வடநாட்டானுக்கு பூராவுமே அடிமையாய் இருந்ததால் நாம் 'சூத்திரன்', 'ராட்சசன்','சண்டாளன்', 'அசுரன்', 'குண்டகன்', 'கோளகன்', 'பிரதிகோலன்'; 'நரகன்'... ஆகத்தான் இருக்கநேரும். இப்பொழுதும் அப்படியே இருக்கிறோம் என்றாலும் அது ஓரளவுக்காவது ஆட்டம் கொடுத்துள்ளது. திராவிடநாடு ஏற்பட்டவுடன் ஆட்டம் கொடுத்தவைகளைப் பிடுங்கி எறிந்துவிடுவோம். பிறகு 6000 மைலை 60,000 மைல் தூரம் ஆக்கி அவனையும் திராவிட நாட்டுக்குப் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு வரும்படி செய்வோம் என்பதை உலகத்தில் உள்ள மற்ற சிறுசிறு நாட்டின் சரித்திரத்தையும், நிலையையும் கண்டு தெரிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.'' [29] முதலில் வடவனிடமிருந்து விடுதலை பின்னர் வெள்ளையனிடமிருந்தும் பூரண விடுதலை

படிப்பகம்

www.padippokam.com



என்பதே பெரியாரின் திராவிடநாடு அடைவது பற்றிய கொள்கைத் திட்டமாகும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

வெள்ளையரசுக்கு உட்பட்ட திராவிட நாடு பெறும் முன்பே வெள்ளையரசு இந்தியாவை விட்டு வெளியேறுவது என தீர்மானித்தது. அப்போது திராவிட நாட்டைத் தனியாக பிரித்துக் கொடுக்கும்படி அவ்வரசிடம் வேண்டினார் பெரியார். பிரிட்டிஷ் அரசு அவ்வாறு செய்யவில்லை. அரசியல் அதிகாரத்தைக் காங்கிரஸ் கட்சியிடம் கொடுத்து விட்டு வெள்ளையன் வெளியேறினான். அதன்பின் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் நான்கு திராவிட தேசிய இனங்களை உள்ளடக்கிய பழைய சென்னை மாகாணம் மொழிவழி மாகாணங்களாக பிரிக்கப்பட்டன. முதலில் ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிந்தது. அதன் பின் கர்நாடகமும், கேரளாவும் தனி மாநிலங்களாகப் பிரிந்தன.

கேரளாவும், கர்நாடகாவும் தனி மாநிலங்களாகப் பிரிந்த போது பெரியார் கூறினார்: ''பொதுவாக ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்கு கவலை இல்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகாவும், கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால்– இவை சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கிற எண்ணம் தோன்றிவிட்டது. என்ன காரணம் என்றால்;

ஒன்று, கன்னடனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இனச்சுயமரியாதையோ, பகுத்தறிவுணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படி எனில் அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது; சூத்திரன் என்பதுபற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது. அவர்கள் மத மூடநம்பிக்கையால் ஊறிவிட்டவர்கள்.

இரண்டு, அவர்கள் இருவருக்குமே மத்திய ஆட்சி என்றும், வடவராட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாய் இருப்பது பற்றியும் சிறிதும் கவலை இல்லை. ஆகவே இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங்கொண்டவர்கள் எதிரிகள் என்றே சொல்லலாம்.

மூன்றாவது, இவர்கள் இருநாட்டவர்கள். பெயரளவில் இருநாட்டவர்கள் என்றாலும் அளவில் எஞ்சிய சென்னை ராஜ்யம் என்பதில் 14 மாவட்டங்களில் இரண்டே ஜில்லாக்காரர்கள்... அப்படி 14-ல் 7-ல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைத்துக் கொண்டு இவை கலந்து இருப்பதால் நம் நாட்டைத் தமிழ்நாடு என்று கூட சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள். இதை நான் ஆந்திரா பிரிந்தது முதலே சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால் இவர்கள் சீக்கிரம் ஒழியட்டுமென்றே கருதிவந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாகப் பிரிய நேர்ந்து விட்டது. ஆதலால் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.'' [30]



பெரியார் நான்கு தேசிய இனங்களையும் உள்ளிட்ட திராவிட நாடே இதுவரை கோரிவந்திருந்த போதிலும் ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிந்தவுடனேயே தனது தனிநாட்டுக் கோரிக்கையில் நம்பிக்கை இழந்து விட்டார். திராவிட இனத்தில் இருக்கும் கேரளாவும், கர்நாடகாவும் போய் ஒழியட்டும் எனக் கருதினார். ஏன் அவற்றை எதிரிகளாகவே கூட கருதினார் என்று தெரிகிறது.

ஒரே மரபினமாக, திராவிட இனமாக இருந்தபோதிலும் அதற்குள் நான்கு தேசிய இனங்களாகவே நான்கு மொழிக்காரர்களும் இருந்தனர். தத்தம் தேசிய இன உணர்வின் காரணமாகவே அவர்கள் தனித்தனி மாநிலமாக ஆக விரும்பிப் பிரிந்தார்கள். இந்த தேசிய இன உணர்வை பெரியாரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அதனால் அவர்களை இனஉணர்வு அற்றவர்கள் என்றும் இனச் சுயமரியாதையே அற்றவர்கள் என்றும் கூறுகிறார். அவர் இங்கு குறிப்பிடுவது திராவிட இன (Race) உணர்வேயாகும். மரபின அடிப்படையிலான ஒற்றுமையும் அதன் அடிப்படையிலான தனிநாடும் பெரியார் கோரிவந்த போதிலும் அதற்கு எதிராகவே நிகழ்ச்சிகள் நடந்ததால் அவருக்கு அதில் சோர்வு - கவலை இல்லாமை - ஏற்பட்டுவிட்டது.

அதன் பின்னர்கூட அவருடைய பார்வை தேசிய இன அடிப்படையில் அமையவில்லை. மூன்று மாநிலத்தவர்களும் பிரிந்த பின்பு தமிழ்நாடு மட்டுமே தனித்து நிற்க நேரிட்டுவிட்ட பின் 'இப்பொழுது நம்முடன் கன்னடம், மலையாளம் நாடுகளின் சம்பந்தமில்லாமல் தனித்தமிழ் நாடாக ஆகிவிட்டோம். ஆகவே இதை இப்போது தமிழ்நாடு என்றே சொல்லலாம்.' [31] (திராவிடநாடு என்று அல்ல) என்று அவர் கூறி வந்த போதிலும் தமிழ்நாடு என்பதையும் திராவிட நாடு என்பதையும் தொடர்ந்து அவர் சேர்த்தே பயன்படுத்தி வந்தார்.

''அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களைச் சேர்த்துக் குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும்

படிப்பகம்

www.padippkam.com



திராவிடம் என்ற சொல்லை விட்டுவிட்டு 'தமிழன்' என்று சொல்லியாவது 'தமிழ்' இனத்தைப் பிரிக்கலாம் என்றால் அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து நானும் தமிழன்தான் என்று கூறிக் கொண்டு உள்ளே புகுந்து விடுகிறான்.'' [32]

''நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்றும், திராவிட நாடே-தமிழ் நாடு தமிழருக்கே ஆக வேண்டும் என்று சொல்லு கிறோம். மலையாளம், ஆந்திரம், கர்நாடகம் பிரிந்து போய் அவை அவைகளுக்கான தனிச் சட்டசபைகள் அமைத்துக் கொண்டு விட்டன, நமக்கும் அவைகளுக்கும் சம்பந்தமில்லை. என்றைக்காவது நம் நாடு பிரிந்தேதான் ஆகும். பலரின் உயிர் தியாகத்தின் மூலம்தான் நாட்டைப் பிரிக்க முடியும்.'' [33]

முன்னாள் சென்னை மாகாண அமைப்பிலிருந்து மூன்று மாநிலங்கள் பிரிந்து சென்ற பின் எஞ்சி இருந்த தமிழ் நாட்டையே பெரியார் திராவிட நாடு என்பதாகக் கூறி வந்தார் என்பதை இது தெளிவு படுத்துகிறது. இதுவும் கூட தமிழ் நாடு ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அமைந்த கண்ணோட்டம் அல்ல. சென்னை நகரம் தமிழ் நாட்டுடன் இருப்பதா ஆந்திராவுடன் இருப்பதா அல்லது இரண்டுக்கும் பொதுவாக இருப்பதா என்ற பிரச்சினை வந்தபோது அவர் கூறினார் : ''பிரிவினை விசயத்தில் என் கருத்து உங்கள் எல்லோருக்கும் தெரியும். பூரண விடுதலை பிரிவினை வேண்டும் என்பவன் நான். அந்த அளவில் எவ்வளவு எல்லை குறைத்துக் கிடைத்தாலும் கவலை இல்லை என்று சொன்னவன் நான். இன்று காலையில் கூட டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி அவர்களிடம் எனக்கு சென்னை நகரம் முக்கியமல்ல அன்னியர் ஆதிக்கமற்ற அன்னியர் சுரண்டலற்ற பூரண சுயேச்சையுள்ள பிரதேசம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதுதான் தேவை என்று சொன்னேன். ஒருவேளை சென்னை போய்விடும் என்றாலும் நான் என்றும் அதிகக் கவலைப்பட மாட்டேன் என்றும் சென்னை ஒழிந்து போனால் பாக்கி உள்ள 'தமிழ் நாட்டை என் இஷ்டம் போல் ஆக்கி நாளைக்கே பூரண விடுதலை பெற்ற பிரதேசமாக ஆக்கி விளம்பரம் செய்து விட முடியும் என்றும் சொன்னேன்.'' [34]

எனவே பெரியார் ''பொது மொழி, பொது நிலப்பகுதி'' என்பது போன்ற தேசிய இன அடிப்படைகளில் தனது இன விடுதலை, பிரிவினைக் கோரிக்கைகளை அமைத்துக் கொண்டிருந்தவர் அல்ல



என்பது தெளிவு. உண்மையில் அவர் மொழி அடிப்படையிலான பிரிவினையை அங்கீகரிக்கவில்லை.அவர் ஒருமுறை கூறினார்: ''மொழியின் மீது ஒரு நாடு ஏன் பிரிய வேண்டும். சாதியின் மீது, மதத்தின் மீது, இனத்தின் மீது பிரிவது என்றால் அதற்கு அர்த்தம் உண்டு. ஏனெனில் அவை ஒவ்வொன்றுக்கும் மாறுபட்ட, பொருத்தமற்ற, ஒற்றுமையற்ற கொள்கைகள்,திட்டங்கள் உண்டு. அவைகளில் இலாப நஷ்டம், சாதக பாதகம் அடைபவர்கள் இருப்பார்கள். அவர்கள் இலாபத்தைப் பெருக்கவோ, நஷ்டத்தைக் குறைக்கவோ தாங்கள் மெஜாரிட்டியாய் இருக்கும் நாட்டைப் பிரித்துக் கொண்டால் நல்லது என்று ஆசைப்படுவார்கள். இது இயற்கை'' [35] மதம், ஜாதி, மரபினம் (Race) அடிப்படையிலான பிரிவினையில் இருக்கும் பழமைவாத பிற்போக்குத் தன்மையையும், மொழி அடிப்படையிலான தேசிய இனங்களின் பிரிவினைக் கோரிக்கையில் இருக்கும் முதலாளித்துவ ஜனநாயகத் தன்மையையும் பெரியார் பிரித்தறிந்து கொண்டிருக்கவில்லை என்பதையே அவருடைய இக்கூற்று காட்டுகிறது. பெரியாரின் இனப் பார்வை எப்போதுமே தேசிய இனம் என்ற அடிப்படையில் அமைந்திருக்கவில்லை.

அவர் ஒருமுறை கூறினார்: இந்த இழிவால் அவதிப் படுகின்றவர்கள் தமிழ் மொழி பேசுகின்றவர்கள்-தமிழர்கள் என்பவர்கள் மட்டுமல்லாமல் சென்னை மாகாணத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும் அதாவது வேறு பல மொழிகள் பேசும் மக்கள் உள்ள வங்காளம், பீகார், பம்பாய், மகாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும் இருக்கிறார்கள். அங்குள்ள தாழ்த்தப்பட்ட தோழர்களும் தம்மை திராவிடர்கள் என்றுதான் கூறிக் கொள்கிறார்கள். உண்மையில் அவர்களும் திராவிடர்களேதாம். இவர்கள் எல்லோரும் இன்றில்லாவிட்டாலும் நாளை நிச்சயம் ஆரியத்தை எதிர்க்க அதற்காக புரட்சி செய்ய ஒன்றுபடப் போவது நிச்சயம். எனவேதான் நாம் பல எதிர்ப்புகளுக்கிடையேயும் திராவிடர் கழகம் என்ற பேராலேயே தொடர்ந்து பாடுபட்டு வருகிறோம்.'' [36]

பெரியார் அனைத்திந்திய அளவில் எல்லா தேசிய இனங்களிலும் திராவிடர்கள் இருக்கிறார்கள் என்று கருதினார். அதே நேரத்தில் தென்நாட்டில் இருக்கும் நான்கு தேசிய இனங்களை மட்டும் கொண்ட திராவிட நாடு அமைக்க வேண்டும் என்று விரும்பினார். அதிலிருந்து மூன்று தேசிய இனங்கள் தனி மாநிலங்களாக அமைந்து கொண்டபின் திராவிட நாட்டைத் தமிழ் நாட்டளவில் சுருக்கிக் கொண்டார். அதுவும் கூட சாத்தியமில்லை எனில் கிடைக்கும்

படிப்பகம்

www.padippkam.com



பகுதியை அது எவ்வளவு சிறியதானாலும் திராவிட நாடாக ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தார். இவ்வாறு அவருடைய நாட்டுப்பிரிவினை குறித்த பார்வை மரபின அடிப்படை யிலானதாகவே இருந்தது. ஆனால் அதே நேரத்தில் இந்தியா முழுவதும் பல்வேறு தேசிய இனங்களாக மக்கள் பொதுமொழி, பொதுநிலம், பொதுப்பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் ஒன்றுபட்டு வந்தனர். இது பெரியாரின் மரபினப் பார்வைக்கு திராவிடத் தனிநாட்டு கோரிக்கைக்கு எதிரானதாக இருந்தது. எவ்வாறாயினும் தேசிய இன அடிப்படையிலான ஒற்றுமையும், எழுச்சியும் முற்போக்கானதும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை பெற்றதும் ஆகும். அதனால்தான் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகள் (திரிபுவாதிகள் அல்ல) தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை – தேசிய விடுதலையை தமது கட்சித்திட்டத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

ஆனால் பெரியார் மரபினப் பார்வை கொண்டிருந்ததால் அதன் அடிப்படையிலான விடுதலை உரிமை பற்றி மட்டுமே கருத்துக்கொண்டிருந்தார். அவருடைய திராவிட இனப்பார்வையின் காரணமாக அவர் முன்வைத்த திராவிட நாட்டுக் கோரிக்கை நாட்டை வடநாடு, தென்நாடு என பாகுபடுத்துவதாகவும் வட நாட்டிலிருந்து தென்னாட்டைப் பிரிப்பது என்பதாகவும் இருந்தது. வடநாட்டுச் சுரண்டலிலிருந்து விடுதலை என்று அவர் கூறினார். இது வடநாட்டில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதையும் அவர்களுடைய சுயநிர்ணய உரிமைப்போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டம் என்பதையும் அவரால் காண முடியாதபடி செய்தது. அடுத்து திராவிட நாட்டுக்குள்ளேயே கூட தமிழ் தேசிய இனத்தைத் தவிர பிற தேசிய இனங்களையும் அவற்றின் மொழியுரிமையையும் மதிக்க முடியாதவராக்கியது. ஒரு கட்டத்தில் திராவிட இனத்தில் இருக்கும் பிற தேசிய இனங்கள் கூட (மலையாளிகள், கன்னடர்கள்) நமக்கு எதிரிகள் என்று கூறவேண்டிய நிலைக்கு அவரைத் தள்ளியது. அதனாலேயே அவர் கன்னடம், மலையாளம், தமிழ்ப் பகுதியை இணைத்து தட்சிணப்பிரதேசம் அமைக்கும் யோசனையை எதிர்த்தார்.[37]

மேலும் அவர் தனது திராவிட நாடு கோரிக்கையை அடைவதற்காக வடநாட்டை முதல் எதிரியாகவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை தனது நண்பனாகவும் கருதச் செய்தது.



எனவே பெரியாரின் இனக்கொள்கைக்கும், 'உண்மை' இதழ் எடுத்துக் கூறியிருக்கும் தேசிய இனம் பற்றிய வரையறைக்கும் எந்தவிதமான ஒட்டுறவும் இல்லை என்பது தெளிவு.

## 8

பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை குறித்து பெரியாரியல்வாதிகள் அடிக்கடி பெருமையுடன் குறிப்பிடுவதைக் காண்கிறோம். உண்மையில் அவருடைய சுயமரியாதைக் கொள்கைதான் அவருடைய ஆயுட்காலம் முழுவதுமான இயக்கத்துக்கு முதுகெலும்பு போன்ற கொள்கையாக இருந்தது. இக்கொள்கையின் அடிப்படையில்தான் அவருடைய கடவுள், மதஎதிர்ப்பு, பகுத்தறிவுக் கொள்கையும், திராவிட நாட்டுக் கொள்கையும் தோன்றின.

பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை ஒரு சமுதாய சீர்திருத்தக் கொள்கையாகும். ஆனால் பெரியாரியல்வாதிகள் இதை மார்க்சியத்திலும் உயர்ந்த மனிதநேயக் கொள்கை என்றும், பெரியாரியல் மார்க்சியத்தை விட புரட்சிகரமான தத்துவம் என்றும் உரிமை கொண்டாடுகிறார்கள். இது அவர்கள் பெரியார்பால் கொண்டிருக்கும் பெரும் பக்தியினால் கூறுவது என்று நாம் ஒதுக்கி விட முடியாது.

பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை சமுதாயத்தில் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதவரிடையே பிறவியிலேயே உயர்வு-தாழ்வு கற்பிப்பதை ஒழிக்கும் நோக்கம் கொண்ட கொள்கையாகும். இந்து மதமும், அதன் கடவுள்களும், வேதங்களும், இதிகாசப் புராணங்களும், வர்ணாசிரம தர்மத்தைப் போதிப்பதன் மூலம் மனிதரிடையே பிறவியிலேயே பார்ப்பனர் உயர் பிறவி என்றும் பார்ப்பனரல்லாதார் இழி பிறவி என்றும் கற்பிக்கின்றன. எனவேதான் பெரியார் சமுதாயத்தில் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் அனைத்து மதங்களையும், கடவுள்களையும் எதிர்த்த அதே வேளையில் இந்து மதத்தையும் அதன் கடவுளையும் தனது பிரதான தாக்குதல் இலக்காகக் கொண்டு சாடி வந்தார்.

பார்ப்பனரல்லாதார் பார்ப்பனரை விட பிறவியிலேயே

படிப்பகம்

www.padippkam.com



எவ்வகையிலும் தாழ்ந்தவரோ, பார்ப்பனர் எவ்வகையிலும் உயர்ந்தவரோ அல்லர் என்பதை நிறுவுவதற்காகவும், அவ்வாறு கூறும் எல்லா மதங்களும், கடவுள்களும், சாத்திரங்களும், சடங்குகளும் தகர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அவர் போராடினார்.

அவர் தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து செயல்பட்டார். பார்ப்பனரல்லாதார் அதில் இழிவு செய்யப்படுவதை எதிர்த்து அதிலிருந்து வெளியேறினார். காங்கிரஸ் கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி எனக் குற்றம் சாட்டி அதை ஒழிப்பதே தனது தலையாயப் பணி என அறிவித்தார்.

பார்ப்பனரல்லாதார் என்ற சொல் பார்ப்பனரல்லாதாரின் உத்தியோகப் பங்கீட்டுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த போது பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை உணர்வும், இன உணர்வும் பெறுவதற்கு அவசியம் எனக் கருதி திராவிடர் கழகத்தையும் திராவிட நாட்டுக் கொள்கையையும் உருவாக்கினார்.[38]

திராவிடர்களை ஒன்றுபடுத்துவதும், திராவிட நாட்டை அடைவதும் சாத்தியமா என்பதில் அவருக்கு சந்தேகம் இருந்தது. அதனால்தான் திராவிட நாட்டுக் கொள்கையை உருவாக்கிய போது ஒரியாக்காரன் தான் திராவிடன் என உணர்ந்தால் வந்து சேர்ந்து கொள்ளட்டும், மலையாளி தான் திராவிடன் அல்ல எனக் கருதினால் தனியாகப் போகட்டும் என்று கூறினார்.[39] திராவிடன் என்று சொல்வதையே அப்போது ஆந்திரர்கள் விரும்பாமல் இருந்ததால் தான் 'தென்னிந்தியர்' என்று கூறப்பட்டு வந்தது.[40] மேலும் அப்போது திராவிட இனத்துக்குள்ளாகவே பல்வேறு தேசிய இனங்கள் தனி மாநில உணர்வுகளைப் பெற்றுக் கொண்டிருந்தன. பெரியார் திராவிட நாடு கொள்கையை அறிவித்து பிரச்சாரம் செய்து வந்த போதிலும் பின்னர் விரைவிலேயே கேரளாவும், ஆந்திராவும் தனி மாநிலமாகப் பிரிந்து போய் விட்டன. அதன் பின்னர் பெரியார் திராவிட நாட்டுக் கொள்கையை கைவிட்டு விட்டார் என்பது நமக்குத் தெரியும்.

பெரியார் திராவிட நாட்டுக் கொள்கையை முன் வைத்த போது உண்மையில் அவருக்கு திராவிட நாட்டை விட பார்ப்பனர் அல்லாதவர் இன உணர்வும், ஒற்றுமை உணர்வும் பெற்று பார்ப்பனர்களுக்கு எதிராக சுயமரியாதை உணர்வு பெற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்.

அவர் திராவிட நாட்டைக் கைவிட்ட பின்பு கூட



பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை இயக்கத்தைக் கைவிடவில்லை. அவருடைய இறுதிக்காலம் வரையில் அதில் உறுதியுடன் இருந்தார்.

பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதை இயக்கம் என்று நாம் சொல்லும் போது பார்ப்பனரல்லாதாரின் முழுமையான சுயமரியாதை இயக்கம் என்று நாம் கூறவில்லை. பார்ப்பனரல்லாதார், பிறவியிலேயே தாம் உயர்ந்தவர் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர்களால் இழிவு செய்யப்படும்போதே, பார்ப்பனரல்லாதாரில் மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்கள் நிலப்பிரபுக்களாலும், முதலாளிகளாலும் பண்ணை அடிமைகளாகவும், கூலியடிமைகளாகவும் நடத்தப்பட்டு இழிவு செய்யப்பட்டு வருகிறார்கள். இந்த உழைக்கும் மக்களின் சுயமரியாதை பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதால் மட்டும் காப்பாற்றப்பட முடியாது. கூடவே முதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தையும் ஒழிப்பதன் மூலமே காப்பாற்றப்பட முடியும். எனவே பார்ப்பனரல்லாதாரின் முழுமையான சுயமரியாதை இயக்கம் என்பது பார்ப்பனரை எதிர்த்த பார்ப்பனர் அல்லாதாரின் போராட்டத்தில் அல்ல ; முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் எதிர்த்த உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தில்தான் முழுமை பெற முடியும் என்பது சொல்லாமலே விளங்குவதாகும்.

ஆனால் பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராக போர்க்குரல் கொடுக்கும் பெரியார் அதே நேரத்தில் முதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தைப் போதிக்கவில்லை. மாறாக வர்க்க சமரசத்தைப் போதிக்கிறார். எனவே தான் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பார்ப்பனரல்லாத உழைக்கும் மக்களுக்கு முழுமையான சுயமரியாதை இயக்கமாக இல்லை. மாறாக பார்பனரல்லாத தனவந்த வர்க்கங்களுக்கு மட்டுமே முழுமையான சுயமரியாதை இயக்கமாக இருக்கிறது.

அதே போல பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை மார்க்சியத்தையும்விட மனிதநேயமிக்கது என்கிறார்கள் பெரியாரியல் வாதிகள். பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பார்ப்பனரின் ஆதிக்கத்தை எதிர்த்து மனிதகுல சமத்துவத்திற்குப் போராடுகிறது என்ற அளவுக்கு மனிதநேயம் மிக்கது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதே நேரத்தில் இந்தக் கொள்கை வர்க்கப் போராட்டத்தை போதிக்கவில்லை. மாறாக வர்க்க சமரசத்தைப் போதிக்கிறது. இதன்மூலம் கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் கூலியடிமை, பண்ணையடிமைத்தனத்தில் இருப்பதற்கு ஆதரவாக (மனிதாபிமான

படிப்பகம்

www.padippakam.com



மற்றதாக) இருக்கிறது. எனவே இது பார்ப்பனரல்லாத தனவந்த வர்க்கத்திற்கு வேண்டுமானால் முழுமையான மனித நேயத் தத்துவமாக இருக்கிறதே தவிர அனைத்து உழைக்கும் மக்களுக்கும் முழுமையான மனித நேயத் தத்துவமாக இல்லை என்பது தெளிவு.

பெரியார் வர்க்கப் போராட்டத்தை மறுத்து விடுவதால்தான் அவருடைய சுயமரியாதையும், மனித நேயமும் பாதி வழியிலேயே பார்ப்பனரல்லாத சுரண்டும் வர்க்கத்தின் நலன்களோடு முடிவடைந்து விடுகிறது.

பார்ப்பனராதிக்கத்தை ஒழிப்பதை முதன்மைப் படுத்துவதே பின்னர் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்வதற்காகத்தான் என்று பெரியாரியல்வாதிகளில் சிலர் முணுமுணுப்பது நமது காதில் விழுகிறது. ஆனால் இது ஆதாரமற்றதாகும்.

பார்ப்பனராதிக்கம் இந்து மதத்தாலும் அதன் கடவுள் கொள்கைகளாலும் புகுத்தப்பட்ட ஒன்று. எனவே அதன் அழிவு என்பது இந்து மத, கடவுள் ஒழிப்புடன் இணைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் கடவுள், மதம் பற்றிய கருத்துக்கள் மக்களிடம் ஊன்றியிருப்பதற்குக் காரணம் அது போதிக்கப் பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல மாறாக அந்தக் கருத்துக்களை தமது வாழ்க்கையில் மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதற்கு தனியுடைமை சமுதாயத்தின் உற்பத்தி முறையே காரணமாகும். எனவே மதம், கடவுள் ஒழிப்பு என்பது அதற்கு எதிரான பிரச்சாரத்தினால் மட்டுமல்ல தனியுடைமை சமுதாய ஒழிப்புடன்– பொதுவுடைமை சமுதாயத் தோற்றத்துடன் இணைந்ததாகும். (ரசியாவில் குருச்சேவ் – கோர்ப்பசேவ் கும்பல் தலைமையிலும் சீனத்தில் டெங் கும்பல் தலைமையிலும் மீண்டும் முதலாளித்துவம் கொண்டு வரப்பட்டபோது அதே வேகத்தில் கடவுளுக்கும் மதத்துக்கும் புத்துயிர் அளிக்கப் பட்டதைக் கவனிக்க) இதுவே விஞ்ஞானப் பூர்வமான உண்மை.

எனவே உண்மையிலேயே பார்ப்பனராதிக்கத்தை ஒழிக்க விரும்பினால் அதற்கு ஆதாரமாக இருக்கும் இந்து மத, கடவுள் எதிர்ப்பு பிரச்சாரங்களை தனியுடைமை சமுதாயத்தை ஒழித்து பொதுவுடைமை சமுதாயத்தை அமைப்பதற்கான வர்க்கப் போராட்டத்துடன் இணைத்துச் செய்ய வேண்டும் என்பது தர்க்க ரீதியான விஞ்ஞானப் பூர்வமான முடிவாகும். எனவே வர்க்கப் போராட்டத்தை மறுத்து விட்டோ அல்லது குறைந்த பட்சமாக ஒத்தி வைத்து விட்டோ கூட பார்ப்பனராதிக்கத்தை ஒழிக்க முடியாது.



ஆனால் பெரியார் வர்க்கப் போராட்டத்தை விட்டுவிட்டு பார்ப்பனராதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்கிறார்.

இது ஒரு புறம் இருக்க பெரியாரின் விஞ்ஞானப்பூர்வமற்ற பாதிவழி சுயமரியாதை, பாதிவழி மனிதநேயத் தத்துவத்திற்குக் காரணம் என்ன? என்ற கேள்வி எழுகிறது.

காரணம் அவருடைய வர்க்கச் சார்பு என்பதைத் தவிர வேறொன்றும் அல்ல. தமிழகம் முழுவதும் பார்ப்பனரல்லாத தனவந்தர்கள் எண்ணற்றவர்கள். என்ன செல்வம், பதவி, பட்டம் இருந்து என்ன பயன்? மாபெரும் செல்வம் படைத்த சீமான் கூட ஒரு பிச்சைக்காரப் பார்ப்பானைவிட சமூக அந்தஸ்தில் தாழ்ந்தவனே- இதுதான் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேர். அவருடைய கொள்கை விளக்கங்கள், தத்துவங்கள், இயக்கங்கள் அனைத்தும் இதைச் சுற்றி அமைந்தவையேயாகும்.

அவருடைய கொள்கை விளக்கங்களில், தத்துவபோதனைகளில், இயக்க நடைமுறைகளில் எண்ணற்ற முரண்பாடுகள் காணப்பட்டாலும் எப்போதும் இவை பார்ப்பனரல்லாத தனவந்தர் வர்க்கத்தின் நலன்களுடன் அந்த வர்க்கத்தின் கண்ணோட்டத்துடன் முரண் பட்டிருந்ததில்லை என்பதை சற்று ஆழ்ந்து பரிசீலிப்பவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

அவர் பொதுவுடைமை குறித்தும், புரட்சி குறித்தும், பாட்டாளி வர்க்க விடுதலை குறித்தும், ஒட்டுமொத்த மனித சமுதாயம் மனிதநேயம், குறித்தெல்லாம் பேசி இருக்கிறார். ஆனால் அவை எல்லாம் பார்ப்பன எதிர்ப்பு என்ற அதே நேரத்தில் வர்க்கச் சமரசம் என்ற எல்லைக்கு வெளியே சென்றதில்லை.

## பிற் குறிப் பு கள்

| | | |
|---|---|---|
| 1-4. | தத்துவ விளக்கம் | தந்தைபெரியார் 1947-ல் சேலம் கல்லூரி தத்துவ கலைக் கழகத்தில் ஆற்றிய உரை. பெரியார் சுய மரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு ஆறாம் பதிப்பு பக்கம் 23-24 |
| 5. | ,, | பக்கம் 28 |
| 6-9. | ,, | பக்கம் 35-38 |
| 10-11. | ,, | பக்கம் 17-19 |

படிப்பகம்

www.padippkam.com


| | | |
|---|---|---|
| 12. | தத்துவ விளக்கம் | பக்கம் 21 |
| 13. | விடுதலை 20-9-1952 | பக்கம் 1743 |
| 14. | விடுதலை 18-4-1959 | பெரியார் ஈ.வே.ரா.சிந்தனைகள் பக்கம் 1754 |
| 15. | காரல் மார்க்ஸ் | ஹெகலின் உரிமைத் தத்துவம் பற்றிய விமர்சனத்திற்கு அளித்த மேற்குறிப்பு, மதத்தைப் பற்றி, பக்கம் 50 NCBH பதிப்பு 1963 |
| 16. | பிரடெரிக் எங்கெல்ஸ் | டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 191 |
| 17. | ,, | ,, பக்கம் 196 |
| 18. | குடியரசு தலையங்கம் 25-3-1944 | பெரியார் ஈ.வே.ரா.சிந்தனைகள் பக்கம் 1713 |
| 19. | விடுதலை 22-2-1950 | ,, பக்கம் 641 |
| 20. | குடியரசு கட்டுரை 18-6-1969 | ,, பக்கம் 1700-1 |
| 21. | குடியரசு 10-3-1945 | ,, பக்கம் 1691 |
| 22. | விடுதலை தலையங்கம் 4-9-1973 | ,, பக்கம் 1705 |
| 23. | குடியரசு தலையங்கம் 25-3-1944 | ,, பக்கம் 1712 |
| 24. | விடுதலை 20-9-1952 | ,, பக்கம் 1742 |
| 25. | விடுதலை 9-5-1961 | ,, பக்கம் 1757 |
| 26. | பகுத்தறிவு மலர்3, இதழ்6, 1937 | ,, பக்கம் 652 |
| 27. | குடியரசு 26-11-1939 | ,, பக்கம் 655-6 |
| 28. | விடுதலை 7,8-1-1953 | ,, பக்கம் 722 |
| 29. | குடியரசு தலையங்கம் 25-11-1944 | ,, பக்கம் 703 |
| 30. | விடுதலை அறிக்கை 11-10-1955 | ,, பக்கம் 730 |
| 31. | விடுதலை 29-8-1956 | ,, பக்கம் 732 |
| 32. | விடுதலை அறிக்கை 11-10-1955 | ,, பக்கம் 731 |
| 33. | விடுதலை 24-7-1957 | ,, பக்கம் 732 |
| 34. | விடுதலை 7,8-1-1953 | ,, பக்கம் 727 |
| 35. | விடுதலை 7,8-1-1953 | ,, பக்கம் 721-2 |
| 36. | விடுதலை 27-1-1950 | ,, பக்கம் 683 |
| 37. | விடுதலை 14-6-1956 | ,, பக்கம் 729 |
| 38-40. | குடியரசு 3,17-6-1944 | ,, பக்கம் 542-45 காண்க |


படிப்பகம்